ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

30.12.2009 - மலர் 06, இதழ் 43



# 2010

## இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

## கப்பல்களால் மாசுபடும் கடல்

## 'ஏஞ்சலஸ்' நீர்வீழ்ச்சியின் பெயர் மாற்றம்

## 'வேற்றுக்கிரக வாசிகள்' என்பது உண்மையா?

## மூளையின் தனித்துவம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரித்தானிய சங்கம்

பலாத்காரமாக நிறுத்தி வைத்துக் கேட்கும் கோரிக்கைகளை கப்பலில் உள்ளவர்கள் கேட்டு அதற்குக் கீழ்படிய மாட்டார்கள் என நொக்ஸ் விளக்கம் அளித்தார்.

இதற்கிடையில், மன்னனுக்கு அடிபணிந்து இருந்த நொக்ஸின் மகனாகிய கனிஷ்ட நொக்ஸ் கப்பலுக்கு மீண்டும் திரும்பி வந்தான். அவன் கப்பலுக்குச் சென்று அங்கிருந்தவர்களுக்கு மிகவும் கவனமாக நடந்துகொள்ளவேண்டும் என எச்சரித்தான். பின்னர் தந்தையிடம் வந்தான். கப்பலில் உள்ளவர்கள் மாலுமிக்குக் கீழ்படியவில்லை என சிங்கள திசாவைக்கு கூறினான்.

எப்படியிருந்த பொழுதிலும் சிங்களவர்களால் கைது செய்யப்பட்ட பதினாறு கைதிகளும் இரண்டு மாதங்களாக மிகவும் வினயமாக செயல்பட்டனர். பின்னர் மாலுமி கப்பல் பயணத்தை ஆரம்பிப்பதற்கு கட்டளையிட்டார். மே மாதத்தில் கப்பல் இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்றது. கைதிகளை அங்கேயே நிறுத்தி வைத்துவிட்டு திசாவை கண்டிக்குச் சென்றான். அவன் அக்கைதிகளை மன்னனிடம் கொண்டு வருவதற்காக முதன்மையாளர் ஒருவரை அனுப்பினான். பின்னர் அந்தக் கைதிகளும் ஏனைய கைதிகளைப் போல நீண்ட காலமாக இந்நாட்டிலேயே தங்கிவிட்டனர்.

கி.பி 1600 இல் பிரித்தானியர், 'பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம்' எனும் பெயரில் வர்த்தக சங்கம் ஒன்றை நிறுவினர். கீழைத்தேய நாடுகளில் வர்த்தகத்தை மேற்கொள்ளவே அதனை நிறுவினர். இக்காலகட்டத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் அச்சங்கம் வர்த்தக களஞ்சியங்களை அமைத்தது.

கி.பி 1611 இல் முசலிப்பட்டணம் மற்றும் கி.பி 1612 இல் சூரத் எனும் நகரிலும் கி.பி 1639 இல் சென்னையின் தஞ்சாவூர் கோட்டையிலும் கி.பி 1650 இல் கொல்கத்தாவின் ஹுக்கியிலும் அவர்கள் களஞ்சியங்களை அமைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிடிவதையைத் தடுக்க புதிய சுற்றுநிருபம்

பல்கலைக்கழகங்களில் நடைபெறுகின்ற பகிடிவதையைத் தடை செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அறியக்கிடைத்துள்ளது.

இதற்கமைய, இதற்குண்டான சுற்றுநிருபத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தயாரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த புதிய திட்டத்தை அடுத்த வருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது..



இதன் ஆரம்பப்படியாக பல்கலைக் கழகங்களுக்குத் தேர்வாகின்ற மாணவர்களிடம் 'தாம் பகிடிவதையில் ஈடுபட மாட்டோம்' என்று கையொப்பம் பெறப்படவுள்ளது.

பகிடிவதைக்கு எதிரான சட்டம் 1998 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், மாணவர்களின் கையொப்பத்தை எடுப்பதன் மூலம் இந்த சட்டத்தை உரிய வகையில் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

Vijey විජය
விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk



# 'ஏஞ்சல்' நீர்வீழ்ச்சியின் பெயர் மாற்றப்படுகின்றது



உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சியாகக் கருதப்படுகின்ற வெனிசுவெலா நாட்டின் 'ஏஞ்சல்' நீர்வீழ்ச்சியின் பெயர் மாற்றப்பட்டுள்ளது. வெனிசுவெலா நாட்டின் ஜனாதிபதி ஹியுகோ சாவேஸ்தான் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார். 'ஏஞ்சல்' நீர்வீழ்ச்சியின் பெயரை அந்நாட்டின் தேசிய பெயரில் அழைப்பதே சிறப்பாக இருக்கும் என்று ஜனாதிபதி சாவேஸ் தீர்மானித்ததன் காரணமாக, அந்த நீர்வீழ்ச்சியின் பெயர் 'கெரெபாக்குபாய் மெரு' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த நீர்வீழ்ச்சியினை முதன்முதலாகக் கண்டுபிடித்தவர் அமெரிக்கரான 'ஜிம் ஏஞ்சல்' என்பவராவார். 1930 ஆம் ஆண்டுகளில் அவர் பயணம் செய்த விமானம் இந்த நீர்வீழ்ச்சி ஆரம்பமாகின்ற மலையின் உச்சியில் வீழ்ந்ததையடுத்தே மேற்படி நீர்வீழ்ச்சியை அவர் கண்டுபிடித்தார். இதனையடுத்து அவரது பெயரிலேயே இந்த நீர்வீழ்ச்சி 'ஏஞ்சல்' நீர்வீழ்ச்சி என்று அழைக்கப்பட்டது.

எனினும், ஜனாதிபதி சாவேஸின் கருத்தின்படி, ஜிம் ஏஞ்சல் இந்த நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடிப்பதற்கு முன்னரே தமது நாட்டு மக்கள் ஏற்கனவே இந்த நீர்வீழ்ச்சியைப் பற்றி அறிந்திருந்தனர் என்றும் விளக்கமளித்துள்ளார். அதற்கமையவே, அவர் இந்த நீர்வீழ்ச்சியின் பெயரை மாற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் புலமைப்பரிசில்கள்





வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புப் பெற்று செல்கின்ற பெற்றோரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்கும் திட்டமொன்றை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளவர்களின் பிள்ளைகள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளில் சித்தியடைந்தால் அவர்களுக்கு இந்தத் திட்டத்தின்படி உதவிப் பணம் வழங்கப்படும். இருப்பினும், இவ்வாறு நிதி உதவி பெறுவதற்கு விண்ணப்பிக்கின்றவர்களின் தொகை குறைவாக காணப்படுவதால் இந்த எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதற்கு மாணவர்களை ஊக்குவிக்குமாறு பாடசாலை அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# இளம் பிள்ளைகளின் பற்கள் கரைதல்

இலங்கையில் உள்ள இளம் பிள்ளைகளில் எழுபது லட்சத்திற்கும் அதிகமான பிள்ளைகள் பற்சிதைவிற்கு ஆளாகியிருப்பதாக மருத்துவ ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

இதனால், இந்த இளம்பராயத்தினரின் பற்கள் கரைந்து போகக் கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாக பல் வைத்தியர்கள் சங்கத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜெயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

'இந்த நிலைக்கு பிள்ளைகள் ஆளாவதைத் தடுக்கும் பொறுப்பு பெற்றோரிடமே உள்ளது என்றும், அவர்கள் இடைக்கிடையே தமது பிள்ளைகளின் பற்களை பல் வைத்தியர்களிடம் காண்பித்து சிகிச்சைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி அடைவோம்




UNION கல்வி நிறுவனத்தின் புதிய வெளியீடு



SPOKEN ENGLISH BOOK விலை ரூபா 300/=
SPOKEN ENGLISH VIDEO CD விலை ரூபா 300/=

SPOKEN ENGLISH BOOK மற்றும் SPOKEN ENGLISH VIDEO CD யானது முழுமையாக தமிழ் விளக்கத்துடன் தயார் செய்துள்ளோம். இதனைக் கற்றுக் கொள்ள வயது எல்லையோ ஆங்கில முன் அறிவோ தேவையில்லை மற்றவர்களின் துணை அவசியமில்லை. ஆங்கிலத்தில் தயக்கமின்றி பிழையின்றி நண்பர்களுடன் உரையாட தகுந்த பயிற்சி அளித்துள்ளோம்.

இவை இரண்டையும் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் 600/= ரூபாவுக்கான காசுக் கட்டலை அல்லது ஏதாவாது ஒரு மக்கள் வங்கி கிளையில் கணக்கு இலக்கம் A/C NO. 003200170022486 A.A.M. MAASUD எனும் பெயருக்கு வைப்பு செய்து பற்றுச்சீட்டை. அல்லது காசுக்கட்டலை மூலம் என்றால் Director Union எனும் பெயருக்கு மாற்றப்படும் தபால் கந்தோர் Kandy என தெளிவாக குறிப்பிட்டு உங்கள் பெயர். முகவரி தொலைபேசி இலக்கம் என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு காசுக்கட்டலை அல்லது வங்கி வைப்பு பற்றுச்சீட்டையும் இணைத்து அனுப்பவும். (தபால் செலவு உட்பட)

UNION EDUCATIONAL INSTITUTE
P.o.Box 143 Kandy -Sri Lanka.
No.17 Peradeniya Road Kandy. Tel: 0817 918 981 0773-123 523

தபால் மூல ஆங்கிலப் பாடநெறிகள்

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்.

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

கிளாஸ் போகும் காலம். நேரம் மிகுதி / குருகிய காலம் / ஆங்கில முன் அறிவு தேவையில்லை. வயது கட்டுப்பாடு இல்லை. வீண் கட்டணங்கள் செலுத்த வேண்டாம்

இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் உங்களுக்கு




இலவச அழகிய பேக் ஒன்று Dialog Sim (தொலைபேசி இணைப்பு) Spoken English Book மற்றும் Spoken English Video CD என்பன பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இலவசமாக வழங்கப்படும்.



எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்.

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு பொருட்களைக் கொண்டு செல்லக் கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. பெருமளவான பொருட்களை எடுத்துச்செல்ல பிரமாண்டமான கப்பல்கள் உள்ளன. தரையில் ஓடும் வாகனங்களால் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படுவது போல் இத்தகைய கப்பல்களால் கடலுக்கும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.**




# பௌளாஸ்ட் வோட்டர் என்னும் சமநிலை நீர்

## கழிவு நீர்

கப்பல் கடலில் மிதந்து செல்லும்போது அதன் சமநிலை பேணப்படுவது கப்பலுக்குள் உள்ள நீரைக்கொண்டாகும். கப்பலில் பொருட்களை ஏற்றும்போது எடை (பாரம்) அதிகரிக்கும். இந்நிலையில் சமநிலையைப் பேண அந்த நீர் கடலுக்கு வெளியேற்றப்படுகின்றது. பொருட்கள் இறக்கப்பட்டு பாரம் குறையும்போது கப்பலின் சமநிலையை சரி செய்ய மீண்டும் நீர் நிரப்பப்படும். அதற்காக கப்பலில் பெரிய ஒரு தொட்டி இருக்கின்றது. இந்த தொட்டியில் உள்ள நீர் சமநிலை நீர் (Ballast Water) என்றழைக்கப்படுகின்றது.

இந்த நீர்வெளியேற்றம் காரணமாக கடலில் உயிரியல் பல்லினத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படுவதோடு சுற்றாடலும் பாதிக்கப்படுகின்றது. இதனால், கடற்கரையை அண்மித்து. வாழும் மக்களின் பொருளாதார சுகாதார, சமூக வாழ்விலும் பலவிதமான தாக்கங்கள் நிகழ்கின்றன.

## பௌளாஸ்ட் வோட்டர் அச்சுறுத்தல்

கப்பலின் அடிப்பகுதியில் உள்ள பெரிய தொட்டியில் நீர் நிரம்பிக் காணப்படும். பொருட்கள் ஏற்றப்பட்டு பாரம் அதிகரிக்கும்போது இந்த நீரில் குறிப்பிட்ட அளவு கடலுக்கு வெளியேற்றப்படுகின்றது. இந்த நீர் கடல் நீருடன் கலக்கும் போது கடலில் உயிரியல் பல்லினத் தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. இதனால், கடலில் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு உயிரினங்கள் இடம் பெயர்வதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதன்படி நாளொன்றுக்கு 3000 வகையான உயிரினங்கள் இவ்வாறான இடமாற்றத்திற்கு உள்ளாகின்றன.இதனால்,கடலில் துறைமுகத்தை அண்மித்த சூழலில் பாதிப்புக்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது.



கப்பல் எந்த நாட்டில் இருந்து புறப்படுகின்றதோ அந்தப் பிரதேசத்தில் இருந்து எடுக்கப்படும் நீர் இன்னொரு பிரதேசக் கடலில் கொட்டப்படும்போது அந்த நீருடன் பல்வேறு விதமான உயிரின, தாவர அல்லது மூலகங்கள் நீருடன் சேர்ந்து கடலுக்குள் செல்கின்றன. கப்பல் இன்னொரு நாட்டு துறைமுகத்தில் நங்கூரம் இட்டுப் பொருட்களை ஏற்றும்போது கப்பலின் சமநிலையை சரிசெய்ய அந்த நீர் கப்பல் தரித்திருக்கும் துறைமுகக் கடலில் வெளியேற்றப்படுகின்றது. இதன் மூலமே இந்தப் பாதிப்பு ஏற்படுகின்றது.

## சமூக பொருளாதார பாதிப்பு

'பௌளாஸ்ட் வோட்டர்' வெளியேற்றம் காரணமாக முதலில் துறைமுகத்தை அண்மித்த பிரதேசங்களிலேயே பாதிப்பு நிகழ்கின்றது. கடலை அண்டிய பொருளாதார சூழல் இதனால் பாதிக்கப்படுகின்றது.

அத்துடன், மீன்வளத்திற்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. ஒரு பிரதேசத்திற்குப் பொருத்தம் இல்லாத உயிரினங்கள் காரணமாக பல்வேறு விதமான நோய்கள் ஏற்படும் நிலையும் உருவாகின்றது. இதனால், நீர்வாழ் உயிரினங்களின் வாழ்க்கை வட்டமும் பாதிப்படைகின்றது.

## இந்த அச்சுறுத்தலில் இருந்து விடுபட


- துறைமுகங்களுக்குள் பிரவேசிக்கும் கப்பல்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரிக்கும் தேசிய வலைப்பின்னல் முறையை ஏற்படுத்துவது.
- கப்பலில் இருந்து வெளியேற்றப்படும் நீர் தொடர்பாக உயிரியல் பன்முகத்தன்மை பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- இதனால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பது தொடர்பாக விழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இந்த நீரை மாற்றும்போது மோசமான பாதிப்புக்கள் ஏற்படாவண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது.
- தேவைப்படும் சட்டதிட்டங்களை வகுத்தல்.
- கடலை அண்டிய சூழலில் நிலையானதும் முறையானதுமான உயிரினப் பன்முகத்தன்மை பாதுகாப்புத் திட்டங்களை ஆரம்பித்தல்.

## இடம்பெயர் உயிரினங்களைத் தடுக்க

- கடலுக்குள் கொட்டப்படும் நீரை வடித்தல், வேறுபடுத்தல்.
- விஞ்ஞான கதிர் செயற்பாட்டு நடவடிக்கைகளை அறிமுகம் செய்தல்.
- ஒட்சியேற்றம் மூலம் நீரின் தன்மையில் மாற்றம் செய்தல்.
- ரசாயன முறையில் மாற்றம் செய்தல்.

## சுகாதாரப் பாதிப்பு

கப்பலில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் ஊடாக இடத்திற்கிடம் கடத்தப்படுகின்ற உயிரினங்களால் வெளியேற்றப்படும் நச்சுத்தன்மை காரணமாக நீர் மாசடைவதுண்டு. இந்த நீரை அருந்துவதாலும் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதாலும் 'கொலரா' உள்ளிட்ட நோய்கள் பரவ வழியேற்படுகின்றது. இத்தகைய உயிரினங்களை மீன்கள் உணவாகக் கொள்வதாலும் அவற்றை மனிதர்கள் உண்பதாலும் மரணங்கள் அல்லது சுகாதார சீர்கேடுகள் நிகழ்கின்றன.




## சுற்றாடல் சமநிலை சீர்கெடல்

கப்பல்களில் இருந்து வெளியேற்றப்படும் மிதமிஞ்சிய நீரில் உள்ள உயிரினங்கள் அந்த சூழலுக்கு ஏற்ற நிலையில் இருக்குமானால் அவை புறத் தாக்கங்களை எதிர்கொண்டு வளர்ச்சியடையவும் பரவவும் முடியுமாகின்றது. இத்தகைய நிலைமைகளில் வெளிச்சூழல் உயிரினங்கள் ஆக்கிரமிப்பு சக்தி மிக்கவைகளாக மாறுகின்றன.இந்த நிலை ஏற்படும்போது குறித்த சூழலில் வாழும் உயிரினங்கள் மீது அவை செல்வாக்குச் செலுத்தி தாக்கி அழிக்கும் நிலை உருவாகின்றது. அல்லது ஏற்கனவே அந்த சூழலில் வாழும் உயிரினங்களின் உணவுக்கு பாதிப்பை உண்டு பண்ணும் நிலையும் ஏற்படலாம்.

நோய்க்காவிகளாகவும் மாறுவதால் இயல்பான கடல் நீரியல் சூழலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி சமநிலைப் பாதிப்பை உண்டுபண்ணுகின்றன.இத்தகைய பாதிப்புக்கள் கடலோடு சங்கமிக்கும் வடிகால்கள், நீர்நிலைகள் ஊடாக நாட்டுக்குள்ளும் ஊடுருவி மானிட வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

## அச்சுறுத்தலில் இருந்து மீள சர்வதேச அமைப்பு

இத்தகைய நிலையால் உலகின் அனைத்து நாடுகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. இதனைத் தடுக்கும் வகையில் சர்வதேச அமைப்பொன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த சர்வதேச (ISO) சமுத்திர அமைப்பு (International Sea Organisation) பிரதான பங்கை வகிக்கின்றது. இந்த அமைப்பு பாதிப்பைத் தடுக்க உபகரண, ஆலோசனை, வழிகாட்டல், முகாமைத்துவ உதவிகளை வழங்கத் திட்டமிட்டிருக்கின்றது.

## சர்வதேச சமவாயம்

கப்பலில் இருந்து வெளியேற்றப்படும் நீரால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பது தொடர்பாக 2004 பெப்ரவரி 13 ஆம் திகதி இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் ஒரு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் ஓர் உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டது. 'பௌளாஸ்ட் வோட்டர்' முகாமைத்துவம் தொடர்பாக இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

கப்பலின் சமநிலையைப் பேணுவதற்காக கப்பலுக்குள் இருக்கும் தொட்டியில் 1500-5000 கியுபிக் மீற்றர் வரையான நீர் இருக்கின்றது. ஓர் இடத்தில் நிரப்பும் நீரை இன்னொரு நாட்டு துறைமுகக் கடலில் வெளியேற்றுவதால் இத்தகைய பாரிய பிரச்சினைகள் உருவாகின்றன. அதனால், 2009 ஆம் ஆண்டின் பின்னர் இந்த நீரின் கொள்ளளவைக் குறைப்பது தொடர்பாக இந்த உடன்படிக்கையில் இணக்கம் காணப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் இறுதி விண்வெளி நடவடிக்கை பூர்த்தி



புவியின் சுற்றுப்பாதையில் உள்ள சர்வதேச விண்வெளி மத்திய நிலையத்தில் 11 நாட்களாக புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக 'அட்லாண்டிஸ்' விண்வெளி ஓடத்தின் மூலம் விண்வெளிக்குச் சென்றிருந்த ஏழு அமெரிக்க விண்வெளி வீரர்களும் வெற்றிகரமாக மீண்டும் புவிக்குத் திரும்பியுள்ளனர். இவ்வருடத்தின் இறுதி விண்வெளி நடவடிக்கையாக இந்த 'அட்லாண்டிஸ்' பயணம் அமைந்துள்ளது.

கடந்த நொவெம்பர் மாதம் 27 ஆம் திகதி மேற்படி விண்வெளி வீரர்கள் ஏழு பேரும் ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடாவில் அமைந்துள்ள 'கென்னடி' விண்வெளி மத்தியநிலையத்தில் இருந்து புறப்பட்டனர். இந்த அட்லாண்டிஸ் விண்வெளி ஓடமானது தமக்குத் தேவையான பொருட்களையும் எடுத்துக் கொண்டே விண்வெளி நோக்கி புறப்பட்டுச் சென்றது. இந்த நடவடிக்கையில் விண்வெளி மத்திய நிலையத்தின் பழைய உதிரிப்பாகங்களை நீக்கி புதிய உதிரிப் பாகங்கள் பல பொருத்தப்பட்டன.




அத்துடன், அட்லாண்டிஸ் விண்வெளி ஓடத்தின் மூலம் சர்வதேச விண்வெளி மத்தியநிலையத்தில் இருந்து உடைந்த உதிரிப்பாகங்கள் அனைத்தும் மீண்டும் புவிக்கு எடுத்து வரப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறு எடுத்து வரப்பட்டவற்றில் நீரைச் சுத்திகரித்து மீள்பாவனைக்குப் பயன்படுத்த உதவும் இயந்திரம் ஒன்றும் இருந்தது.


இதேவேளை, 'சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆபத்தை எச்சரிக்கும் ஒலிக்கருவியில் இலத்திரனியல் அமைப்பில் ஏற்பட்ட கோளாறின் காரணமாக அடிக்கடி அந்த ஒலிக்கருவி ஒலி எழுப்பிய வண்ணமே இருந்தது. இதனால், விண்வெளி வீரர்களுக்கு உரிய முறையில் நித்திரை கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டன' என அட்லாண்டிஸ் குழுவிற்குத் தலைமை தாங்கிய சார்ள்ஸ் ஹொபோ என்பவர் செய்தியாளர்களுக்குத் தெரிவித்துள்ளார். விண்வெளி மத்திய நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த ரஷ்ய உற்பத்தியான ஆய்வுக் கட்டளை மையத்தில் ஏற்பட்ட கோளாறே இவ்வாறு அந்த இயந்திரம் அடிக்கடி எச்சரிக்கை ஒலி எழுப்பக் காரணமாக அமைந்ததாகப் பின்னர் தெரியவந்தது.

மேற்படி, விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டிருந்த விண்வெளி வீரர்களில் ரெண்டோல்ப் ப்ரென்னிக் என்பவர், எப்போது புவிக்குத் திரும்புவது என மிக ஆவலோடு நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாராம். அவர் விண்வெளி நடவடிக்கையில் ஈடுபடும் பொருட்டு விண்வெளிக்குச் சென்ற பொழுதுதான் ஒரு குழந்தைக்குத் தந்தையானார். பிறந்த குழந்தையைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலிலேயே அவர் புவிக்குத் திரும்புவதில் ஆர்வமாக இருந்துள்ளார்.

அட்லாண்டிஸ் விண்வெளி ஓடத்தை மீண்டும் ஒரே ஒரு விண்வெளி நடவடிக்கைக்கு மாத்திரமே பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய விண்வெளி ஓடங்களைப் போல் அதற்கும் 2010 ஆம் ஆண்டு ஓய்வு கொடுக்கவே நாஸா அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

என்டீவர், கொலம்பியா, டிஸ்கவரி என்பன விண்வெளிப் பயணங்களுக்காக பயன்படுத்தப்படும் ஏனைய விண்வெளி ஓடங்களாகும். இந்த ஓடங்களைப் பயன்படுத்தி மேலும் ஐந்து நடவடிக்கைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படும் என நாஸா நிறுவனம் தெரிவிக்கின்றது. இனி அடுத்ததாக என்டீவர் விண்வெளி ஓடத்தையே விண்வெளிக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பயணம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதமளவில் மேற்கொள்ளப்படும்.

## வியாழனின் 'ஐரோப்பா' உபகிரகத்தில் நீர் உண்டாம்!

ஜுபிடர் அல்லது வியாழன் கிரகத்தை சுற்றிப் பயணிக்கும் 'ஐரோப்பா'எனும் உபகிரகத்தின் நிலப்பகுதியை மூடியிருக்கும் பனிப்படலத்தின் அடியில் பெரும் நீர்நிலைகள் நிறைந்திருப்பதாகவும் உயிரினங்கள் உயிர்வாழும் அளவிற்கு ஒட்சிசன் அதில் அடங்கி இருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



புவிக்கு வெளியே எந்தவொரு கிரகத்திலும் இதுவரை உயிரினங்கள் இருப்பதாக எத்தகைய ஆதாரங்களும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், விஞ்ஞானிகளின் கருத்தின்படி உயிரின இருப்புக் குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கு மிகவும் பொருத்தமான இடம் 'ஐரோப்பா' எனும் வியாழனின் உபகிரகமே என்ற கருத்து நீண்ட காலமாகவே நிலவி வருகின்றது. ஐரோப்பா உபகிரகத்தில் படிந்திருக்கும் பனிப்படலங்கள் ஏறக்குறைய ஒரு மைல் கனவளவைக் கொண்டவை. அதன்மேல் விழும் சூரியனின் கதிர்கள் மீள் செயற்பாட்டிற்கு உட்படுத்துவதன் மூலம் ஒட்சிசன் உற்பத்தியாவதற்கு நல்ல வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

விஞ்ஞானிகளின் கணிப்பீட்டின்படி புவியில் உள்ள அனைத்து சமுத்திரங்களிலும் உள்ள மொத்த நீரின் அளவைவிட ஏறக்குறைய இரண்டு மடங்கு நீர் ஐரோப்பா எனும் உபகிரகத்தின் பனிப்படலத்திற்கடியில் இருக்கின்றது என கருதப்படுகின்றது. அதேபோல் இதற்கு முன்பதாக நம்பப்பட்ட அளவினைவிட பல மடங்கு அதிகமான ஒட்சிசன் வாயுவும் இங்கு நிறைந்திருப்பதாகவும் தற்பொழுது விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## விண்வெளியில் சுவாசிக்க மின்-மூக்கு



நாஸா நிறுவனம் ஈ-நோஸ் (E-Nose) எனும் மின்-மூக்கொன்றை உருவாக்கியுள்ளது. விண்வெளியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி மத்தியநிலையத்தில் விண்வெளி வீரர்களின் உட்சுவாசத்தையும் வெளிச்சுவாசத்தையும் பரிசோதிப்பதற்காகவே இந்த மின்சார மூக்கை நாஸா உருவாக்கியுள்ளது.

இது ஒரு சப்பாத்து (காலணி) அட்டைப் பெட்டியின் அளவைக் கொண்டதாகும். இந்த உபகரணத்தைப் பயன்படுத்தி கடந்த ஆறு மாதகாலமாக விண்வெளி மத்திய நிலையத்தின் வாயுக்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், மனிதனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் போமல்டிஹைட், ஃபிரியோன் 218, மெத்தனோஸ் மற்றும் எத்தனோல் ஆகியன அந்த வாயுக்களில் அடங்கியுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும், அவை பாதிப்பை ஏற்படுத்தும் அளவிற்கு பெரிய அளவில் இருக்கவில்லை என் நாஸா நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின் சாதகமான பெறுபேறுகளினால் எதிர்காலத்தில் சந்திரனுக்கான பயணத்தின்போதோ அல்லது விண்வெளிப் பயணங்களின்போதோ அப்பயணங்களை மேற்கொள்ளும் விண்வெளி வீரர்களுக்கு ஈ-நோஸ் எனும் இந்த மின் -மூக்கைப் பயன்படுத்துவதற்கான ஏதுநிலை குறித்து நாஸா நிறுவனம் கூடிய கவனத்தை செலுத்தி வருகின்றது.

## மற்றுமொரு சூரியமண்டலம்



பூமி உள்ளடக்கிய சூரிய மண்டலத்தைப் போன்று' மற்றுமொரு சூரிய மண்டலத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். 61 வர்ஜினிஸ் என்ற புதிய நட்சத்திரத்தையும் அதைச் சுற்றி வரும் 3 கிரகங்களையுமே விஞ்ஞானிகள் இவ்வாறு கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த வர்ஜினிஸ் நட்சத்திரம் சூரியனின் குணங்களை ஒத்ததாகவே உள்ளது. இந்தக் கிரகங்கள் பூமியைவிட 5 முதல் 24 மடங்கு பெரியவை.

வர்ஜினிஸ் நட்சத்திரம் பூமியில் இருந்து 27.8 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது. இதை வெற்றுக்கண்களால் பார்க்கலாம். வர்ஜினிஸ், சூரியனைவிட 0.96 மடங்கு அளவு சிறியது. இதன் பிரகாசமும் சூரியனைவிடக் குறைந்ததாகத்தான் இருக்கிறது.

இந்த புதிய சூரிய மண்டலத்தை இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா விண்வெளி ஆய்வாளர்கள் அவுஸ்திரேலியாவில் உள்ள விண்வெளி தொலைகாட்டி மூலம் கண்டுபிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளையை பாதுகாப்



தலைச்சுற்று, நிலைதடுமாறல், திடீரென மயங்கி விழுதல் என்பன பாரிசவாதத்தின் அபாய அறிவிப்பாக இருக்கலாம்.

மனித உடலின் நிர்வாகி மூளையாகும். உணவு உட்கொள்ளல், பேசுதல், நினைவிற்கொள்ளல்; சிந்தித்தல், சிரித்தல், நடத்தல், வாசித்தல் ஆகிய அனைத்து செயற்பாடுகளுக்கும் மூளையின் ஒவ்வொரு பகுதிகளும் எமக்கு உதவுகின்றன. மனிதன் ஏனைய உயிரினங்களிலிருந்து வேறுபடுவது இந்த மூளையின் செயற்பாடுகளினால் ஆகும்






அனைத்துமோ பாரிசவாதத்திற்கான அபாய அறிவிப்புகளாகும்.

குருதிக் குழாய் ஒன்று தடைப்படுதல்

## பாரிசவாதம் அல்லது ஸ்ட்ரோக் என்றால் என்ன?

மூளைக்கான குருதி ஓட்டம் தடைப்படுவதால், மூளையின் பகுதிகளுக்கு ஒட்சிசன் மற்றும் பிற போசணைப் பதார்த்தங்கள் செல்வது நிறுத்தப்படும். இதன் காரணமாக, மூளையின் செல்கள் இறக்கும். மூளையின் செயற்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் இந்த நோயை பாரிசவாதம் (ஸ்ட்ரோக்) என்று குறிப்பிடுவர். இது மூளைக்கு ஏற்படும் அவசர பாதிப்பு நிலையாகும்.

## பாரிசவாதம் ஏற்படும் முறைகள் இரண்டு வகைப்படும்

★ **மூளைக்கு குருதி:** மூளைக்கு குருதியை எடுத்துச்செல்லும் குழாய்களில் ஏற்படும் தடைகள் இதற்கு ஒரு காரணமாகும். இதனால்,குருதி ஓட்டம் தடைப்படும். நோயாளிகளில் 80 சதவீதமானவர்களுக்கு இந்நிலைமையே ஏற்படுகின்றது.

★ **குருதிக் குழாய்:** குருதிக்குழாய் வெடித்து மூளைக்குள் குருதி செல்லுதல் ஏனைய காரணமாகும். இந்த நிலை நோயாளிகளில் 15 மற்றும் 20 சதவீதமானவர்களுக்கே ஏற்படுகின்றது.

இவ்வாறு எந்தக் காரணங்களினால் பாரிசவாதம் ஏற்பட்டாலும் நோய் அறிகுறிகள் ஒன்றாகவே இருக்கக் கூடும்.மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள் மட்டும் மாறுபடக்கூடும்.

## பாரிசவாதம் அபாயமான நிலையாகும்

பாரிசவாதத்தால் மரணம் சம்பவிக்கக்கூடும். அல்லது நிரந்தர, தற்காலிக அங்கவீன நிலை ஏற்படலாம். மூளையின் சில பகுதிகள் பாதிப்படையும்போது அப்பகுதிகளினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு தடங்கல் ஏற்படலாம். உடலில் ஒரு பகுதி செயலிழத்தல், பேசும் ஆற்றலை இழத்தல், உடல் அங்கவீன நிலை என்பன ஏற்படும்.

★ இது சிறிது காலத்தில் ஏற்படும் நோயல்ல. துரித கதியில் ஏற்படும் நோயாகும். எனினும், அதற்கு முன் சில நோய் அறிகுறிகள் தென்படும். இவை அந்த நோய் அறிகுறிகளில் சிலவாகும்.

## பாரிசவாதம் ஏற்பட முன்னர் தோன்றும் நோய் அறிகுறிகள்

★ திடீரென ஒரு கண்ணில் அல்லது இரு கண்களில் பார்வை இழக்கப்படுதல் அல்லது பார்வையில் குறைபாடு ஏற்படல்.



★ முகத்தில் அல்லது ஒரு கையில் அல்லது இரண்டு கைகளிலும், கால்களில் உடலின் ஒரு பகுதியில் உணர்ச்சியற்ற நிலை அல்லது செயல் இழத்தல்.

★ பேச முடியாமை அல்லது மற்றவர்கள் பேசுவதைக் கேட்க முடியாமை.

★ தலைசுற்றல் அல்லது தலைசுற்றி நிலை தடுமாறி விழல்.

★ குடிப்பதற்கும் விழுங்கவும் முடியாமை.

★ திடீரென ஏற்படும் வேதனையான தலைவலி.

இவற்றில் சிலவோ அல்லது அனைத்துமோ பாரிசவாதத்திற்கான அபாய அறிவிப்புகளாகும்.

## இவ்வாறான [illegible] ஏற்படின்

இவ்வாறான நோய் அறிகுறிகள் சில நிமிடங்களுக்கோ அல்லது சில மணித்தியாலங்களுக்கோ இருக்கக்கூடும். இவற்றைப் பொருட்படுத்தாமல் விடக்கூடாது. மூளைக்கான குருதி ஓட்டம் தடைப்படுவதனைக் காட்டுவதாக இவை அமையலாம். இதனைப் பொருட்படுத்தாவிடின் பாரிசவாத நிலை ஏற்பட்டு உடல் செயலிழக்கும்.

அதனால், எப்போதாவது இந்த அபாய அறிகுறிகளை அறிந்தால் வைத்திய சிகிச்சையை உடன் பெற வேண்டும். 'ஸ்கேன்' இயந்திர வசதி கொண்ட அண்மைய வைத்திய சாலைக்கு நோயாளியை அழைத்துச் செல்வதே உகந்தது.

## பாரிசவாதத்திற்கான சிகிச்சைகள்

**மருந்துகள்:** இம்மருந்துகள் மூளைக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கப் பயன்படுத்தப்படும். இதனால், நோயாளி இயல்பு நிலைக்குத் திரும்பும் வாய்ப்பு அதிகமாகும்.

**சாதாரண சுகாதார நடைமுறைகள்:** விழுங்கும்போது ஏற்படும் அசௌகரியங்களைப் போக்கிக்கொள்ள மற்றும் மலம்,





மூளையை 'ஸ்கேன்' பரிசோதனைக்குட்படுத்துவதன் ஊடாக இதனை அறியலாம். இதனால், நோயாளியை 'ஸ்கேன்' வசதியுடைய வைத்தியசாலைக்கு அனுப்பவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்கு ...போம்



புகைப்பிடித்தல் பிரதான காரணி



நிறையுணவை உட்கொள்ளல்

...சலம் கட்டுப்பாட்டுக்கான நடைமுறைகளை பாரிசவாத நிலை ஏற்பட்ட பின் கைகொள்ள வேண்டும்.

**புனர்வாழ்வுஅளித்தல்:**




பாரிசவாதத்தினால் உடல் செயற்றிறனை இழந்தவர்களுக்கு அவர்களின் இயல்பு வாழ்வுக்காக புனர்வாழ்வுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

★ குடும்ப உறுப்பினர் பாதிக்கப்பட்டிருந்தால் கவனமாக இருத்தல்.

★ உயர் குருதிஅழுத்தம் மற்றும் இதயநோய் மருந்துகளை தொடர்ந்து பயன்படுத்தல்.

★ புகைப்பிடித்தலை தவிர்த்தல்.

★ நார்ச்சத்து அதிகமுள்ள (காய்கறி, பழங்கள்) நிறையுணவை உட்கொள்ளல்



திடீர் தலைவலி அபாய அறிவிப்பாக இருக்கும்

## பாரிசவாதத்தைக் குணப்படுத்த முடியுமா?

பாரிசவாதத்தைத் தடுக்கவோ, முழுமையாகக் குணப்படுத்தவோ இதுவரை மருந்துகள் கண்டுபிடிக் கப்படவில்லை. நோயை அறிந்த பின் மருத்துவ ஆலோசனைகளை பெறுவதனையே செய்யமுடியும்.

## பாரிசவாதத்தை தவிர்த்துக்கொள்ளல்

கொழுப்புக் குறைந்த நிறையுணவை உட்கொள்ளல் 'கொலஸ்ட்ரோல்' நிலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.

★ உப்பின் பாவனையைக் குறைத்தல்

★ நாளாந்தம் 30 நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்தல்

★ உயரத்திற்கு ஏற்ற நிறையைப் பேணல்

★ நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்



30 நிமிடங்கள் வரை நாளாந்தம் உடற்பயிற்சி செய்தல்




## உங்களுக்குத் தெரியுமா?

★ அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நடுத்தர வயதுள்ள 10 சதவீத மானவர்கள் எந்தவித நோய் அறிகுறியும் இன்றி பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மூளையில் மேற்கொண்ட 'ஸ்கேன்' ஆய்வுகளில் இது தெரியவந்துள்ளது.

★ பாரிசவாத நோயாளிகளில் 30-40 சதவீதமானவர்கள் 70 வயதிற்கும் குறைந்தவர்களே

★ நாளாந்தம் இலங்கையில் தனிநபர் மரணம் 600 ஆக உள்ளது. இதில் 10 சதவீதமானவை பாரிசவாதத்தினால் ஏற்படுகின்றது.





# சாரணியருக்கு 'ஜெனிகல்வேரி' விருது

சாரணியர் அமைப்பின் 4 ஆம் மாத்தறை ஏ கம்பனிக்கு அதன் சேவைகளுக்காக 'ஜெனிகல்வேரி' விருது வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாரணியர் சத்துரிக்கா ரட்னாயக்கா வெளியிடும் அவரின் அனுபவம் வருமாறு,

ஒருவர் கொண்டிருக்கவேண்டிய நற்குணங்கள் சிலவற்றை சாரணியத்தின் மூலம் கற்றுக்கொள்ளலாம். சிறந்த சமூக சேவைத் திட்டத்திற்காக 'ஜெனிகல்வேரி' விருதைப் பெற்றுக்கொண்டமை எங்களின் அதிர்ஷ்டமாகும். இதன்மூலம் பெற்றுக்கொண்ட



2009 ஒக்டோபர் 16 ஆம் திகதி உலக உணவு தினத்தை கொண்டாடும் வகையில் மாதிரித் தோட்டம் அமைக்கப்பட்டது.



2009 நொவெம்பர் 5 ஆம் திகதி தீபாவளிக் கொண்டாட்டங்கள்.



5 ஆவது கொழும்பு பெண் சாரணியர்கள் 2009 ஒக்டோபர் 6 ஆம் திகதி நாவலயில் உள்ள சென்.லூக்ஸ் முதியோர் இல்லத்துக்கு விஜயம் மேற்கொண்டனர்.

ஆற்றல்களும் அனுபவங்களும் மிகுந்த பெறுமதி மிக்கவை.

முதலாவதாக நாங்கள் சமய வழிபாட்டுத் தலங்களில் எங்கள் சேவைகளை நடத்தினோம். இது இலங்கையின் பிரதான சமய அனுஷ்டானங்களின் மரியாதையை தெரிந்து கொள்வதற்கும் வளர்த்துக்கொள்வதற்கும் பெரிதும் உதவியது.

அடுத்ததாக நாங்கள் சிரமதானத்தின் மூலம் பாடசாலை வளாகமொன்றைச் சுத்தம் செய்ததோடு பாலர் பாடசாலை மாணவர்களுக்கு தற்போதைய சுகாதார விடயமான டெங்கு நோயை இல்லாதொழித்தல் தொடர்பாக பிரசாரம் ஒன்றையும் மேற்கொண்டோம். நமது சின்னஞ்சிறு சகோதரிகள் டெங்கு அபாயம் தொடர்பான விடயத்தில் கவனமாக இருப்பதற்கும் அவர்களை விழிப்படையச் செய்வதற்கும் இது வாய்ப்பாக அமைந்தது.

எமது அடுத்த நோக்கம் ஆதரவற்றோரின் கல்வியில் உதவுதல். அவர்கள் எங்களின் அனைத்து நடவடிக்கைகளிலும் மகிழ்ச்சியுடன் பங்குபற்றினார்கள். பரஸ்பர புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, நெருங்கிய உறவு எங்களுக்குள் நிலவியது.

இறுதியாக வயது முதிர்ந்தவர்களுக்கும் உதவி செய்தோம். எங்களின் பயணத்தின் மூலம் வயதானவர்கள் எத்தகைய மகிழ்ச்சியடைந்தனர் என்பது ஓர் உளப்பூர்வமான அனுபவமாக அமைந்தது. அவர்களின் அன்றாடப் பணிகளில் உதவியதன் மூலம் பொறுமை, சகிப்புத்தன்மை என்பனவற்றையும் கற்றுக்கொண்டோம். சாரணியத்தின் மூலம் கற்ற பாடங்கள் வாழ்க்கைக்கானவை, மிகப் பெறுமதியானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவு அமைச்சரவைக் கூட்டம் கடலுக்கடியில் எவ்வாறு நடைபெற்றது?



> 'நீருக்கடியில் பேசுவதும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவதும் இலகுவான விடயமல்ல; அதனால், தத்தமது கருத்துக்களை தெரிவிக்கும் சகல நடவடிக்கைகளும் சைகை மூலமாகவே நடத்தப்பட்டது. இது குறித்து முன்கூட்டியே பயிற்சியும் ஒத்திகையும் மேற்கொள்ளப் பட்டிருந்தன'



**உலகில் முதன்முதலாக ஒரு நாட்டின் அமைச்சரவைக் கூட்டம் கடலுக்கு அடியில் நடைபெற்ற செய்தியை 'விஜய்'யில் வழங்கியிருந்தோம். மாலைதீவுகளில் நடைபெற்ற இந்த நீருக்கடியிலான மாநாடு பற்றிய சில விரிவான விபரங்களைப் பார்ப்போம்.**

வெள்ளை நிற மணல் பரப்பால் நிறைந்த அழகிய கடற்கரைகளை கொண்ட சுற்றுலாத் தீவுக்கூட்டமாக மாலைதீவு சுற்றுலா விரும்பிகளால் கருதப்படுகின்றது. இத்தகைய சிறப்புமிக்க மாலைதீவின் ஜனாதிபதியான மொஹமட் நஷீட்டும் அவரின் அமைச்சரவை அங்கத்தவர்களும் இவ்வாறு கடலுக்கடியில் கூட்டத்தை நடத்தியது விநோதத்திற்காக அன்று; புவி வெப்பம் அடைவதால் சமுத்திரத்தின் நீர் மட்டம் உயர்வடைதல் தொடர்பான அபாயத்தை உலகிற்கு உணர்த்தவும், உலகம் விழிப்படையவும் ஆகும். அதற்காக ஜனாதிபதி நஷீட் மேற்கொண்ட இந்த விசித்திர முயற்சி வெற்றி அளித்தது என்றே கூறலாம்.

## புவி வெப்பமடைதலும் மாலைதீவும்

காலநிலை மாற்றத்தால் புவி வெப்பம் அடைதல் இன்று உலகின் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. அது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சூழலியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். புவி வெப்பமடைவதால் கடலின் நீர்மட்டம் உயர்வடைவது குறித்து ஐக்கிய நாடுகள் சபைகூட எச்சரித்துள்ளது.

எனவே, மாலைதீவுக்குச் சொந்தமான கிரி்ஃஷி எனும் சின்னஞ் சிறிய தீவுக்கருகில் உள்ள கடலில் 6 மீற்றர் ஆழத்தில் குறித்த அமைச்சரவைக் கூட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டதையடுத்து,. குதிரைக்குளம்பு வடிவத்தில் மேசை மற்றும் கதிரைகள் கடலுக்கடியில் பொருத்தப்பட்டிருந்தன. இதேவேளை, மாநாட்டிற்கு முன்பதாக ஊர்வலமொன்றை நடத்துவதற்கு மாநாட்டை ஒழுங்கு செய்த அரசாங்கப் பேச்சாளரான அமினாத் ஷவுனா ஒழுங்குகள் அனைத்தையும் மேற்கொண்டிருந்தார்.

## அமைச்சரவைக்கு விசேட பயிற்சி

மாலைதீவின் ஜனாதிபதி நஷீட் ஒரு சிறந்த நீச்சல் வீரர். ஆனால், அவரின் அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் நீந்தத் தெரிந்தவர்கள் அல்லர். அமைச்சர்கள் நீருக்குள் நீந்தி எவ்வாறு மாநாட்டில் கலந்துகொள்வது என ஏற்கனவே ஒத்திகை பார்க்கப்பட்டதாக ஷவுனா பத்திரிகை மாநாட்டில் விளக்கம் அளித்தார். அது மாத்திரமன்றி, நீருக்கடியில் பேசுவதும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவதும் இலகுவான விடயமல்ல; அதனால், தத்தமது கருத்துக்களை தெரிவிக்கும் சகல நடவடிக்கைகளும் சைகை மூலமாகவே நடத்தப்பட்டது. இது குறித்து முன்கூட்டியே பயிற்சியும் ஒத்திகையும் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

## மாநாடு ஆரம்பம்

திட்டமிட்டபடி ஒக்டோபர் 17ஆம் திகதி மாநாடு ஆரம்பமாகியது. முதன்முதலாக இந்து சமுத்திரத்தில் மாலைதீவு ஜனாதிபதி நஷீட் அவர்களே நீந்தினார்.அவரைத் தொடர்ந்து அவருக்கடுத்த பதவியில் இருக்கும் வஹீட் மற்றும் அமைச்சரவை குழுவினரும் நீருக்கடியில் சென்றனர்.அவர்களுக்கு ஒத்துழைக்க சுழியோடிகள் பலர் ஆயத்தமாக இருந்தனர். நஷீட் அவருக்குரிய ஆசனத்திற்கு வந்தார். அவரின் ஆசனத்திற்குப் பின்புறம் சிவப்பும் பச்சை நிறமும் கொண்ட மாலைதீவின் தேசியகொடி பொருத்தப்பட்டிருந்தது. கடலில் காணப்பட்ட பல்வேறு வர்ணங்களை கொண்ட அழகிய மீன்கள் பலஅங்கு என்ன நடக்கின்றது என அதனைச் சூழ நீந்திய வண்ணம் இருந்தன.

## கொப்பன்ஹேகன் மாநாடு

அமைச்சரவைக் கூட்டம் வெற்றிகரமாக நிறைவேறியது. ஜனாதிபதி நஷீட் மற்றும் அமைச்சர்கள் அனைவருக்கும் ஒத்துழைக்கத் தயாராக இருந்த சுழியோடிகள் மற்றும் தொலைக்காட்சிக் கலைஞர்கள் பலர் இம்மாநாட்டில் பங்குபற்றினர். இம்மாநாடு அரை மணிநேரம் நடைபெற்றது. மாநாடு முடிவடைந்ததும் கடலில் இருந்து கரைக்கு மீண்ட ஜனாதிபதி நஷீடை ஊடகத்துறையினர் சூழ்ந்துகொண்டனர்.

வளிமண்டலத்தில் சேரும் காபன் வாயுவின் வீதத்தைக் குறைக்காவிட்டால் இந்த நூற்றாண்டின் இறுதியில் மாலைதீவு முழுமையாக நீரில் மூழ்கிவிடும் என சூழலியலாளர்கள் எச்சரித்துள்ள நிலையில், காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகளின் மாநாடு இம்மாதம் டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகன் நகரில் நடத்தப்பட்டுள்ளது. இந்த மாநாட்டின் கவனத்தை ஈர்ப்பதற்காகவுமே மாலைதீவின் அமைச்சரவைக் கூட்டம் இவ்வாறு கடலுக்கடியில் நடத்தப்பட்டுள்ளது.

## நிதிப் பற்றாக்குறை

மாலைதீவில் தேர்தல், வாக்குரிமை உள்ளிட்ட பல ஜனநாயக நடவடிக்கைகள் ஆரம்பித்தபின்னர் நடைபெற்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட முதல் ஜனாதிபதி நஷிட் ஆவார். நாட்டின் பொருளாதாரத்தில் 1 பில்லியன் டொலர் அளவு பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக அவர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்ததுடன் கடந்த அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தினால் ஏற்பட்ட துண்டு விழும் தொகையை சமாளிக்க முடியாதுள்ளமையால் வெளிநாட்டு உதவி இல்லாமல் குறித்த கொப்பன்ஹேகன் மாநாட்டிற்கு செல்வதில்கூட பிரச்சினை இருப்பதாக முன்னர் அவர் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## டென்மார்க்கின் நிதி உதவி

மாலைதீவு அரசிற்கு நிதி உதவி வழங்குவதற்கு டென்மார்க் அரசு இச்சந்தர்ப்பத்தில் முன் வந்தது. காலநிலை மாற்றத்தால் கடல் மட்டம் உயர்ந்து கடலில் மூழ்கும் நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நாடுகளில் மாலைதீவு முக்கிய இடத்தை வகிப்பதாக சூழலியல் நிபுணர்கள் நெடுங்காலமாகவே எச்சரிக்கை செய்து வந்துள்ளனர். எனவே, கொப்பன்ஹேகனில் நடைபெற்ற மாநாட்டிற்கு மாலைதீவில் இருந்து மூன்று பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் பொருட்டு டென்மார்க் அரசு 25 லட்சம் யூரோ நிதியை ஒதுக்கியது.

## மாலைதீவின் எதிர்காலம்

2100 ஆம் ஆண்டளவில் கடல்மட்டம் 18 செ.மீற்றரில் இருந்து 59 செ.மீற்றர் வரை உயரலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலைக்குழு 2007 இல் எச்சரித்திருந்தது. அவ்வாறு நிகழ்ந்தால் கடல் மட்டம் உயர்ந்து மாலைதீவுக்குச் சொந்தமான தீவுகள் அனைத்தும் கடலில் மூழ்கி, மனித உயிர்களுக்குப் பேராபத்தை விளைவிக்கும் என அக்குழுவினால் மேலும் எச்சரிக்கப்பட்டிருந்தது. மொத்தம் 1192 தீவுகளைக் கொண்ட மாலைதீவில் 80% மானவை கடல்மட்டத்தில் இருந்து ஒரு மீற்றரிலும் குறைவான உயரத்திலேயே அமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**-இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடின வேலைகளை இலகுவாக்குதல்

"அபிராமி, இம்முறை தவணைப் பரீட்சையில் ஒவ்வொரு பாடங்களிலும் பெற்ற புள்ளிகள் எவ்வளவு?"

"ஐயோ, கமலா இம்முறையும் நான் கணிதப் பாடத்தில் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளேன்"

"உண்மைதான். இம்முறை நானும் சென்ற முறை பெற்ற அதே புள்ளிகளைத் தான் கணிதப் பாடத்தில் பெற்றுள்ளேன். குறைந்த புள்ளிகளே பெற்றதனால் அம்மா என்னைக் கடுமையாகத்திட்டினார்"

பிள்ளைகளே, நீங்களும் இத்தகைய பிரச்சினைகளுக்கு சிலவேளைகளில் நிச்சயம்முகம் கொடுக்கலாம். சிலவேளை, கணிதப் பாடத்தில் குறைவான புள்ளிகள் பெறாவிட்டாலும் வேறு ஒரு பாடத்திலோ அல்லது வேறு சில பாடங்களிலோ குறைந்த புள்ளிகளைப் பெறக்கூடும்.

அதன்பின் முன்பைவிட அடுத்த தவணையில் நன்றாகப் படிப்பீர்கள் அல்லது பிரத்தியேக வகுப்பிற்குச் சென்று கூடிய புள்ளிகளைப் பெறலாம் என முயற்சிப்பீர்கள். ஆனால், நாட்கள் செல்ல மீண்டும் இம்முயற்சியில் மாற்றம் ஏற்படலாம். மீண்டும் உங்கள் முயற்சிகளும் ஆர்வமும் குறைந்து விடலாம்.

சிறியோர்களாகிய உங்களுக்கு இத்தகைய பிரச்சினைகள் இருப்பதுபோலவே ஒருகாலத்தில் ஜப்பான் நாட்டிலும் அவர்களின் அபிவிருத்தி விடயத்தில் ஒரு பாரிய பிரச்சினை ஏற்பட்டது. 1949 ஆம் ஆண்டளவில் அவர்கள் இந்த முரண்பாடுகளுக்கு தீர்வு காணும்வகையில் (கற்றல்) இலகு நடைமுறை எனும் ஒரு முறையைப் பயன்படுத்தினர். அதன்மூலம் அவர்களுக்கு மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெறக்கூடியதாக இருந்தது. அதேபோலவே இந்த இலகு நடைமுறை சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது.



## இலகு நடைமுறையைப் பற்றி....

இச்செய்தி உங்கள் மனதுக்கு பெரு மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருக்கும். இலகு நடைமுறை மூலம் உங்கள் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதே அடுத்த கேள்வியாக இருக்கும்.

இலகு நடைமுறை என்பது சிறிய தொரு குழுவாகும். நீங்கள் உங்களைப் போன்ற வேறு சில நண்பர்களையும் இதில் இணைத்துக்கொள்ளுங்கள். இக்குழுவில் 6 பேருக்கு மேல் 12 பேருக்கு குறைவானதொரு எண்ணிக்கையினரே இருக்கமுடியும். அத்துடன், உங்களைப் போலவே இவ் அனைவருக்கும் கல்வி நடவடிக்கைகளை மென்மேலும் விருத்தி செய்துகொள்ளவேண்டும் என்ற நோக்கமும், பாடங்களில் அதிக புள்ளிகளைப் பெறவேண்டும் என்ற பொது நோக்கமும் இருக்கவேண்டும். நீங்கள் அனைவரும் அடிக்கடி சந்தித்து உங்கள் அபிலாஷைகள் குறித்து கலந்துரையாட வேண்டும். பிரச்சினைகளை இனங் காணல், பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

## இலகு நடைமுறையின் நோக்கம்

இலகு நடைமுறையை அமைத்துக்கொள்ளும் முறையை இப்பொழுது நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதன் நோக்கம் குறித்தும் அறிந்து கொள்வது நன்மை பயக்கும்.

இப்பொழுது நீங்கள் அனைவரும் ஒரு குழுவினராவீர்கள். இச்சந்தர்ப்பத்தில் குழுவின் ஆற்றல்களை அபிவிருத்தி செய்தல், ஒருவருக்கொருவர் நம்பிக்கையை கட்டியெழுப்புதல், இதன்மூலம் தைரியத்தை வளர்த்தல் என்பன படிப்படியாக வளர்ச்சியடையவேண்டும். அது மாத்திரம் போதுமானதல்ல, நோக்கம் குறித்து எந்நேரமும் மனதில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். அதனை நோக்கி நெருங்குவதற்கும் அதன் பயன்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

குழுவின் சகல அங்கத்தவர்களதும் அறிவு, திறன் அனைத்தும் ஒன்றாக வளர்ச்சியடைய வேண்டும் என்பதை மனதில் பதித்துக் கொண்டு உங்கள் அறிவுக்கு புதிதாக ஏதேனும் எட்டினால் அதனை குழுவில் உள்ள ஏனைய அனைத்து உறுப்பினருக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

## இலகு நடைமுறைக்கு தலைவர்?

இலகு நடைமுறை குறித்து உங்களுக்கு ஏதேனும் அறிவு இப்பொழுது கிடைத்திருக்கும் அல்லவா? எனவே இந்த இலகு நடைமுறைக் குழுவை ஒரு சிறிய குடும்பம்போல் நினைத்துக் கொண்டு இக்குழுவிற்கு தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யுங்கள். அப்பொழுதுதான் உங்களின் இலக்கு நோக்கிய பயணத்தை நெருங்கும் வேலைத்திட்ட நடவடிக்கையை மேற்கொள்ள அத்தலைவரால் முடியும். அதே போல், பிரச்சினைகளுக்கு தீர்வு காணஒத்துழைத்தல், வழிகாட்டல், திட்டங்கள் உரிய முறையில் நடைபெறுகிறதா என்பதைப் பொறுப்புடன் பார்த்துக்கொள்ளல் என்பன தலைவரின் கடமையாகும். இவை தவிர, குழுவின் ஒழுக்கத்தை நிலைநாட்டி தொடர்ந்து பாதுகாத்தல் என்பனவும் தலைவர் ஆற்றவேண்டிய கடமையாகும்.

## செயலாளர்

தலைவர் போலவே இந்த கற்றலின் இலகுநடைமுறைக்குச் செயலாளர் ஒருவரும் மிக அவசியமாகும். செயலாளருக்குப் பல பொறுப்புகளோடு பல கடமைகளும் இருக்கின்றன. அறிக்கை தயாரித்தல், குழுவின் முன்னேற்றத்தை மதிப்பிடல் ஆகியவற்றை கற்றலின் இலகு நடைமுறைக் குழுவிற்கு அறிக்கையாக முன்வைக்க வேண்டும். இவை செயலாளரின் கடமைகளில் சிலவாகும்.



## வசதிகளை வழங்குபவர்

இதற்காக ஆசிரியர் ஒருவரை நியமிக்கமுடியும். உங்கள் குழுக்கூட்டத்திற்கு தகுதியான சூழலைப் பெற்றுக்கொடுத்தல், கற்றலின் இலகு முறைத்தலைவருக்கு அறிவுரை வழங்குதல், அதேபோல் உங்களின் அக்கறையை மென்மேலும் வளர்த்துக்கொள்வதற்கும் தொடர்பாடல் நடவடிக்கை வசதிகளை மேற்கொள்வதற்கும் அந்த ஆசிரியர் உரிய ஒழுங்குகளைச் செய்வார்.

## அங்கத்தவர்கள்

கற்றல் இலகு நடைமுறைக் குழுவின் அங்கத்தவர்களாகிய உங்களுக்கும் பல பொறுப்புக்கள் வழங்கப்படும். எப்பொழுதும் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கல், உங்கள் குழுவின் நோக்கம் நிறைவேற உங்களின் உச்ச ஒத்துழைப்புகளை வழங்கல் என்பன மிக முக்கியமானவையாகும். அறிந்த பல விடயங்களை குழுவினருக்குக் கூறி அறிவூட்டுவதும் அறியாத பல விடயங்களை அவர்களிடமிருந்து அறிந்து கொள்வதும் உங்கள் கடமையாகும்.

## பல்வேறு ஆலோசனைகள்

இந்தக் கற்றல் இலகு நடைமுறையை கற்றல் நடைமுறைக்கு மாத்திரமல்ல வேறு பல திட்டங்களுக்கும் பயன்படுத்தலாம். கல்வி நடவடிக்கைகளை போலவே உங்கள் பாடசாலையின் வெவ்வேறு திட்டங்களுக்கும் பயன்படுத்தமுடியும். பாடசாலையில் வீட்டில், அலுவலகத்தில் வைத்தியாசலையில் இம்முறையை நடைமுறைப்படுத்தும் சில வழிகள் வருமாறு:

### பாடசாலையில்


- பாடசாலையில் க.பொ.த சாதாரண தர, உயர் தரப்பரீட்சையின்போது சித்தியடைவோரின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- பாடசாலையைச் சுத்தமாக வைத்திருத்தல்.

### அலுவலகத்தில்

- சேவையைப் பெற்றுக்கொடுப்பதில் ஏற்படும் தாமதத்தை தவிர்த்தல்.
- உற்பத்திப் பொருட்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்.
- வைத்தியசாலையை உரிய முறையில் நடத்துவதற்கு உதவுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**ப.இரஞ்சித் ஜெயகர்**

### கடுமையான வேலையை இலகுபடுத்தல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியா

**அரசு:** இரு சட்ட சபைகொண்ட பல கட்சிக் கூட்டு வரம்புடைய முடியரசு.
**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து-31 ஓகஸ்ட் 1957: கூட்டமைப்பு-16 செப்டெம்பர் 1963.
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினம், மலேசியா தினம்-ஓகஸ்ட் 31.
**நாட்டின் தலைவர்:** துவான்கு மிஸான் செய்னால் அபிதின் இப்னி அல் மர்ஹூம் சுல்தான் மஹ்முட்.
**பிரதமர்** (2009): டடுக் செரி நஜிப் டுன் ரஸாக்.


அரசர்


தேசிய கொடி


பிரதமர்




## புவியியல்

இந்நாடு தென்கிழக்கு ஆசியாவின் 'மலாய்' குடா நாட்டில் அமைந்துள்ளது. 'போர்னியோ' தீவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சபாஹ் மற்றும் சராவாக் என்பனவும் மலேசியாவில் உள்ளடக்கமாகும். ஐக்கிய அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோ மாநிலத்திற்கு சற்று சமமான நிலப்பகுதியை மலேசியா கொண்டுள்ளது. மேற்கு-சுமாத்ரா (இந்தோனேஷியா), கிழக்கு-தென் சீனக்கடல், வடக்கு-தாய்லாந்து, தெற்கு-சிங்கப்பூர் என்பன எல்லைகளாக அமைந்துள்ளன.

மலேசியாவின் பெரும்பகுதி அடர்ந்த காடுகளையும் மலைத் தொடர்களையும் கொண்டது. இக்காடுகளில் சந்தன மரங்கள், தேக்கு மரங்கள் உள்ளிட்ட பெறுமதிமிக்க மரங்கள் நிறைந்து காணப்படுகின்றன. தென்கிழக்காசிய பெருநிலத்தின் ஒரு பகுதியாக மலேசிய குடாநாடு அமைந்துள்ளது. உலகில் றப்பர் மற்றும் பனை எண்ணெய் உற்பத்தியில் மலேசியாவே முன்னணி வகிக்கின்றது.


**மொத்த நிலப்பரப்பு:** 126,853 ச.மைல் (328,549 ச.கி.மீ)
**உயர்ந்த சிகரம்:** குனுங் கினாபாலு-13451 அடி.


விளைநிலங்கள்





**தாழ்ந்த மையம்:** தென் சீனக்கடல்.
**நிலப்பிரிவுகள்:** 13.
**மக்கள் தொகை:** 25,715,819.
**தலைநகரமும் பெரிய நகரமும்:** கோலாலம்பூர்.
**ஏனைய பெரிய நகரங்கள்:** கிலாங், ஜோஹோர் பாரு.
**நாணயம்:** ரிங்கிட்.
**மொழிகள்:** பஹாசா மலாயு (மலே உத்தியோகபூர்வமானது) ஆங்கிலம், சீன மொழிப்பிரிவுகளான கென்டோனிஸ், மண்டரின், ஹொக்கியன்,ஹக்கா, ஹெய்னன், ஃபூச்சோ என்பனவும் தமிழ் மொழியும் ஏனைய இந்திய மொழிகளான தெலுங்கு, மலையாளம், பஞ்சாபி என்பனவும் தாய் மற்றும் ஏனைய பூர்வீக மொழிகளும் காணப்படுகின்றன.
**கலாசாரம்:** மலே, சீன, இந்திய கலாசாரங்களின் தாக்கத்தோடு பூர்வீக கலாசாரமும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவை மூன்றும் கலந்த ஒரு கலாசாரத்தையும் இங்கு காணலாம்.
**இனங்கள்:** மலே 50.4%, சீனர் 23.7%, பூர்வீகக் குடிகள் 11%, இந்தியர் 7.1%, ஏனையோர் 7.8%.
**சமயங்கள்:** இஸ்லாம், பௌத்தம், தாவோஸிசம், இந்து, கிறிஸ்தவம், சீக்கியமதம், ஷாமானிசம் (கிழக்கு மலேசியா).
**எழுத்தறிவு:** 89%. **இணையத்தளக் குறியீடு:** .my. **தொலைபேசி இலக்கம்:**+60.
**தேசிய சின்னங்கள்: மலர்**-Chinese Hibiscus, **பறவை**-Rhinoceros Hornbill. **மிருகம்**-புலி. (விளையாட்டு, மரம் என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை).



## தேசிய கீதம்

Negaraku, tanah tumpahnya darahku,
Rakyat hidup, bersatu dan maju,
Rahmat bahagia, Tuhan kurniakan,
Raja kita, selamat bertakhta.... என ஆரம்பமாகின்றது.




## காலநிலை

பூமத்திய ரேகைக்கு அண்மையில் அமைந்திருப்பதால் வெப்பமான காலநிலையைக் கொண்ட ஒரு நாடாகும். மலேசியாவின் வருடாந்த வெப்பம் 70 முதல் 90 பாகையும் சராசரி மழைவீழ்ச்சி 22 முதல் 33 மி.மீற்றராகவும் காணப்படுகின்றது. இரு பருவக்காற்று காலங்களிலும் அதிக மழைவீழ்ச்சியை பெறுகிறது.

## வரலாறு

கி.மு 2500-1500 க்கு இடைப்பட்ட காலத்தில் மக்கள் இடம்பெயர்ந்து இங்கு குடியேறியதாக நம்பப்படுகின்றது. அவர்களில் அதிகமானோர் கரையோரப் பிரதேசங்களிலேயே குடியேறினர். இவர்கள் சீனர்கள் மற்றும் இந்தியர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

1800 களில் பிரித்தானியரும் ஒல்லாந்தரும் இப்பிராந்தியத்தின் மீது நாட்டம் கொண்டனர். பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் தனது வர்த்தக நடவடிக்கைகளை இப்பிராந்தியத்தின் முக்கிய தீவாகிய சிங்கப்பூரில் நிலைநாட்டியது.1880 களில் பிரேசில் நாட்டில் இருந்து இந்நாட்டுக்கு றப்பர் மரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. நாளடைவில் றப்பர் பிரதான ஏற்றுமதிப் பொருளாக மாறியது. றப்பர் பெருந்தோட்டங்களில் பணிபுரிய பெருந்தொகையான தென்னிந்திய தொழிலாளர்கள் மலேசியாவிற்கு அழைத்து வரப்பட்டனர்.

1957 இல் மலேயா பிரதேசம் பிரித்தானியரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட அதனைத் தொடர்ந்து 1963 இல் மலேயா, சிங்கப்பூர், உடபோர்னியோவில் உள்ள (ஸபாஹ்), சாரவாக் போன்றவை ஒன்றிணைந்து மலேசியா உருவானது.

## பொருளாதாரம்

**விவசாயம்** (வளமான நிலம் 5%) - றப்பர், பனை எண்ணெய், கொக்கோ, நெல். **தொழிலாளர் தொகை:** 10.67 மில்லியன் (விவசாயத்துறை 14.5%, கைத்தொழில் துறை 36%, சேவைகள் 49.5%) **வேலையற்றோர்:** 3.2%. **கைத்தொழில்கள்:** றப்பர் மற்றும் பனை எண்ணெய், இலகு கைத்தொழில் உற்பத்திகள், இலத்திரனியல் பொருட்கள், தகரச் சுரங்க உற்பத்தியும் உருக்கி பிரித்தெடுத்தலும், மரத்தளபாட உற்பத்தி. **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், மரங்கள், செம்பு, இரும்புருக்கு, இயற்கை வாயு.

**ஏற்றுமதிகள்:** இலத்திரனியல் உபகரணங்கள், பெற்றோலியம் மற்றும் திரவ இயற்கை வாயு, மரங்களும் மரத் தளபாடங்களும், பனை எண்ணெய், றப்பர், புடவை வகைகள், ரசயானப் பொருட்கள். **இறக்குமதிகள்:** இலத்திரனியல் பொருட்கள், இயந்திரப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திகள், பிளாஸ்டிக் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** ஐக்கிய அமெரிக்கா, சிங்கப்பூர், ஜப்பான்,சீனா, ஹொங்கொங், தாய்லாந்து, தாய்வான், தென்கொரியா, ஜேர்மனி, இந்தோனேஷியா.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்:** பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் (2000): 4.6 மில்லியன், **செல்லிடத் தொலைபேசி** (2000): 5 மில்லியன், **வானொலி நிலையங்கள்:** AM 35, FM 391,SW 15. **வானொலிகள்:** 10.9 மில்லியன், **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம்:** 01, **தொலைக்காட்சிப் பெட்டிகள்:** 10.8 மில்லியன், **இணையத்தள வழங்குனர்:** 7. **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 5.7 மில்லியன்.

## போக்குவரத்துத் துறை

**புகையிரதப் பாதைகள்:** 2418 கி.மீ. **பெருந்தெருக்கள்:** 65877 கி.மீற்றர், **நீர்வழிப் போக்குவரத்து:** 7296 கி.மீ. **விமான நிலையங்கள்** (2002): 114.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் கணிப்பீடு சார்ந்த வினாக்கள் உள்ளடங்கிய மாதிரிப் பரீட்சை இல-02


## வினாத்தாள் I (கடந்த வார தொடர்ச்சி...)

பெயர்: ........................................................ நேரம்: 45 நிமிடங்கள்

★ 22 ஆம் 23 ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண்கோலத்திற்கேற்ப '?' குறி உள்ள அடைப்புக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

(22)



(1) 40 (2) 60 (3) 50

(23)




(1) 20 (2) 30 (3) 120

(24)



இலங்கை, கிழக்கு மாகாணம், திருகோணமலை என்பனவற்றுக் கிடையிலான தொடர்பைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் B இனால் காட்டப்படுவது யாது?


(1) இலங்கை (2) திருகோணமலை (3) கிழக்கு மாகாணம்

(25)



மிருகம், பறவைகள், மைனா என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் மைனாவைக் காட்டும் எழுத்து யாது?

(1) E (2) S (3) R

(26) உருவின் கோலத்திற்குரிய குறியினால் காட்டப்படும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.







(27) இக்கோலத்தைப் பாருங்கள். 567 → 675 → 756 → ?

இக்கோலத்திற்கேற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான எண் யாது?

(1) 675 (2) 567 (3) 576

★ 28 ஆம் 29 ஆம் வினாக்களுக்குரிய ரகசியக் குறியீடுகளைக் கண்டுபிடித்து, அதன் கீழ்க் கோடிடுக.

(28) 'கட்டடம்' என்பதை KCLLM என எழுதினால், 'திட்டம்' என்பதை எழுதுவது;

(1) ACLN (2) ACLM (3) ACLT

(29) 'அச்சம்' என்பதை ASHT என எழுதினால், 'தச்சன்' என்பதை எழுதுவது;

(1) KSHK (2) KSHA (3) KSHR

★ முதலாவது நிரலில் தரப்பட்டுள்ள எண் பெறுமானத்திற்குப் பிரதியீடு செய்யத்தக்க எண்கூட்டைத் தரப்பட்டுள்ள எண்கூடுகளில் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

(30) 10+5 = (1) 8+2 (2) 14+6 (3) 9+6




(31) 8x6 = (1) 50+6 (2) 50-2 (3) 6x6

(32) 90÷3 = (1) 15+10 (2) 60÷2 (3) 20-10

★ பின்வரும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

(33) நாம் ஏன் குடையைப் பாவிக்கின்றோம்?

(1) அது எமது நாட்டு உற்பத்தி.
(2) இதைக் கொண்டுசெல்லும்போது கவர்ச்சிகரமாக இருக்கும்.
(3) இதைப் பாவிப்பதால் மழை, வெயில் என்பனவற்றிலிருந்து பாதுகாக்கும்.

(34) ஐந்து முட்டைகளை அவிப்பதற்கு 4 நிமிடங்கள் எடுக்கும். ஆகவே, பத்து முட்டைகளை அவிப்பதற்கு எத்தனை நிமிடங்கள் எடுக்கும்?

(1) 8 நிமிடங்கள் (2) 4 நிமிடங்கள் (3) 10 நிமிடங்கள்

★ கீழே காணப்படும் பெயர்களுக்குப் பொருத்தமான வடிவத்தின் கீழ்க் கீறிடுக.

(35) தோமஸ் அல்வா எடிசனுடன் சம்பந்தப்பட்டது.

(1)  (2)  (3) 

(36) மார்க்கோணியுடன் சம்பந்தப்பட்டது.

(1)  (2)  (3) 

★ பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் விடை தரப்பட்டுள்ளது. அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

(37) ஒரு வரிசையில் 12 தூண்கள் உள்ளன. அடுத்து வரும் இரு தூண்களுக்கு இடையிலான தூரம் 10m ஆகும். முதலாவது தூணுக்கும் கடைசித் தூணுக்கும் இடையிலான தூரம் எத்தனை மீற்றர்?

(1) 100m (2) 150m (3) 110m (..........)

(38) ஒவ்வொன்றும் 250g நிறையுள்ள 12 தேயிலைப் பெக்கட்டுக்கள் 2kg நிறையுள்ள ஒரு பெட்டியில் அடைக்கப்படுகின்றன. இப்போது பெட்டியின் நிறை யாது?

(1) 14kg (2) 5kg (3) 2kg (..........)

(39) எனதும் தம்பியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 32 வருடங்கள். தம்பி என்னைவிட 8 வயது இளையவன். எனது வயது யாது?

(1) 24 (2) 20 (3) 8 (..........)

(40) இரண்டு வகுப்புகளில் மொத்தமாக 80 மாணவர்கள் இருந்தார்கள். ஒரு வகுப்பைவிட மற்றைய வகுப்பில் 6 மாணவர்கள் கூடுதலாக இருந்தனர். கூடுதலாக உள்ள வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 43 (2) 74 (3) 37 (..........)

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

## வினாத்தாள் II

01. கீழ்வரும் அறிவுரைகளை வாசித்து (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்கு விடைகள் தருக.

**அறிவுரைகள்**

- தினமும் எட்டு மணி நேரம் உறங்குங்கள்.
- கடிகாரத்தின் உதவியுடன் நீங்களே காலையில் எழுந்து விடுங்கள்.
- அப்போதுதான் பாடசாலைக்குப் பதற்றம் இல்லாமல் செல்ல முடியும்.
- பற்றூரிகையை எப்போதும் ஒரே இடத்தில் வையுங்கள்.
- குளிப்பதில் இருந்து பள்ளி செல்லத் தயாராவது வரை உங்கள் வேலைகளை நீங்களே செய்துகொள்ளுங்கள்.
- பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் பாதணி, புத்தகப்பை போன்றவற்றை அதற்குரிய இடங்களில் வையுங்கள்.
- அதன்பின்னர் கைகால் முகம் கழுவுங்கள்; உணவு உண்ணுங்கள்.
- மாலையில் சிறிது நேரம் விளையாடுங்கள்.
- பின்னர் வீட்டுப் பாடங்களை எழுதுங்கள்; படியுங்கள்.
- எத்தகைய பிரச்சினை என்றாலும் அதை அம்மாவிடம் மறைக்காமல் சொல்லுங்கள்.

(i) தினமும் எத்தனை மணி நேரம் உறங்க வேண்டும்? ..........................................

(ii) காலையில் யாரும் எழுப்பாமல் நாமே எழும்ப வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? ..........................................

(iii) பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் என்ன செய்ய வேண்டும்? ..........................................

(iv) எப்போது விளையாட வேண்டும்? ..........................................

(v) எந்தப் பிரச்சினையையும் மறைக்காமல் யாரிடம் சொல்ல வேண்டும்?
..........................................

02. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து, வெற்றிடத்தை நிரப்புக.

(i) உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் ..........................................வது நல்லது.
(உலவு, உளவு, உழவு)

(ii) அவளது நிலைமையைக் கண்டு அங்குள்ள அனைவரும் ..........................................
(இரங்கிணர், இறங்கினர், இரங்கினர்)


(iii) அவன் எய்த ..........................................பட்டு மான் கீழே விழுந்தது.
(பாநம், பாணம், பானம்)

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆராய்ச்சியாளர்கள் வேற்றுக்கிரக

**வேற்றுக்கிரகங்களில் உயிரினங்கள் வாழ்கின்றனவா? இது எங்கள் அனைவரதும் மனதில் எழும் கேள்வியாகும். வேற்றுக்கிரகங்களில் உயிரினங்கள் பற்றிய நமது ஆர்வத்தைத் தூண்டுவதாக வெள்ளித்திரையில் காண்பிக்கப்படுகின்ற திரைப்படங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமான ஒரு திரைப்படமே 'டிஸ்ட்ரிக் 9' (District 9) ஆகும். பிரதான விண்கலம் செயலிழந்து அதில் இருந்து அநாதரவான நிலைக்குள்ளாகி மனிதர்கள் வாழும் சூழலில் தென்னாபிரிக்காவின் ஜொஹன்னஸ்பேர்க் நகரில் சிக்கியுள்ள புரோன்ஸ் என்ற வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய கதையே இத்திரைப்படமாகும். விஞ்ஞான ஆய்வுகளுக்கு மட்டும் வேற்றுக்கிரகவாசிகளை உள்ளடக்காது இவ்வாறு மனிதர்கள் வாழும் சூழலுக்குக் கொண்டுவருவதில் அமெரிக்க விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர். வால்நட்சத்திரம் ஒன்றின் செயற்பாட்டுக்குக் காரணமான அமினோ அமிலத்தைக் கண்டுபிடித்ததுடன் இந்த முயற்சி ஆரம்பமாகியது**



## வால்நட்சத்திரம் ஒன்றின் மூலம் வெளிப்பட்ட உயிரின ரகசியம்

'வைல்ட் கொமட் 2' என்ற வால்நட்சத்திரத்தைக் கண்டுபிடித்ததுடன் உயிரினங்களின் ஆரம்பத்திற்குக் காரணமான புரத வகையில் காணப்படக்கூடிய 'கிளய்சீன்' அமினோ அமிலத்தைக் கண்டுபிடிப்பதில் வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் வெற்றி கண்டனர். 2004 ஆம் ஆண்டு அமெரிக்காவின் நாஸா விண்ணியல் ஆராய்ச்சி நிலையம் விண்வெளிக்கு அனுப்பிய 'ஸ்டார் டஸ்ட்' என்ற விண்கலம் மூலம் இந்த உண்மை புலப்படுத்தப்பட்டது. வால்நட்சத்திரம் ஒன்றில் இருந்து இந்த விண்கலம் பெற்றுக்கொண்ட வாயு மற்றும் தூசுப்படலத்தை ஆராய்ந்த பின்னரே அது பற்றிய தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டன. இந்த விண்கலம் பூமியில் இருந்து 93 கோடி மைல்கள் தூரத்தில் வலம் வந்து கொண்டிருந்தது.

இந்த விண்கலம் பெற்றுக்கொண்ட வாயு மற்றும் தூசுப்படலத்தின் மாதிரியை 2007 ஆம் ஆண்டு பரசூட்டின் உதவியுடன் பூமிக்கு பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த சாம்பல் அடங்கிய பை அமெரிக்காவின் 'யுடா' என்ற பாலைவனப்பகுதியில் 'பரசூட்' மூலம் தரையிறக்கப்பட்டது.



அந்த சாம்பலை ஆராய்ச்சி செய்தபோது 'கிளய்சீன்' என்ற அமினோஅமிலம் கண்டுபிடிக்கப்பட்டது. இது சாதாரணமாக பூமியில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அந்த மாதிரி பெறப்பட்ட வால்நட்சத்திரத்திற்கு 'வைல்ட் கொமட்' (Wild Comet) என்று விஞ்ஞானிகள் பெயரிட்டனர். இந்த புரத வகை பில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன்னர் சூரிய மண்டலத்தில் உருவாகி கிரகங்கள் உருவாகும் போது பரவியவை என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இதன்படி உயிரினங்களின் ஆரம்பத்திற்குத் தேவையான மூலப்பதார்த்தம் விண்கற்கள் ஊடாக வேற்றுக்கிரகங்கள் ஊடாக பூமிக்கு வந்து சேர்ந்திருக்கலாம் என்ற நியாயத்தை விஞ்ஞானிகள் முன்வைக்கின்றனர்.

## உயிரினங்கள் நிறைந்த வேற்றுக்கிரகம்?

விண்வெளியில் 10 ஆயிரம் கோடிக்கு மேற்பட்ட நட்சத்திரங்கள் காணப்படுவதால் 10 லட்சம் அளவான கோள்களும் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இந்தளவு கிரகங்களுக்குள் ஒன்றிலாவது உயிரினங்கள் வாழும் சாத்தியம் இருப்பதாகவே விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

## சமிக்ஞை ஆராய்வு

அமெரிக்காவின் வானியல் ஆராய்ச்சியாளரான பிரான்க் ட்ரக் என்பவர் 1960 ஆம் ஆண்டு விண்வெளியில் தென்படும் நட்சத்திரங்களில் இருந்து சமிக்ஞைகளைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அப்போது வானொலி அலைவரிசை தொலைநோக்கிகள் இரண்டின் உதவியுடன் இரண்டு நட்சத்திரங்கள் மீது தமது அவதானிப்பை மேற்கொண்டிருந்தார். இரண்டு மாதங்களாக அவர் அந்த நட்சத்திரங்களில் இருந்து ஏதாவது சமிக்ஞைகள் கிடைக்குமா என்று அவதானித்தபோதும் அவற்றில் இருந்து எந்தவிதமான அசைவையும் காணவோ, கேட்கவோ முடியவில்லை.

## அபூர்வ ஒளி

இரவில் வானத்தில் அபூர்வமான பிரகாசமான ஒளியைக் காணமுடிவதாக நீண்ட காலமாக நம்பப்படுகின்றது. அடையாளம் காணப்படாத மர்மப் பொருட்கள் UFO (Unidentified Flying Objects) என்று அவை அழைக்கப்படுகின்றன. இவை பறக்கும் தட்டுக்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், அவ்வாறு தென்படும் அநேகமானவை பறக்கும் தட்டுக்கள் அல்ல, அவை வெறும் கற்பனையே. இவ்வாறு மர்மப் பொருட்கள் பூமிக்கு இரவில் வந்து போவதாகக் கூறினாலும் இது [illegible]யில் ஒன்றுகூட அடையாளம் காணப்படவில்லை.

## பறக்கும் தட்டு பற்றிய கதைகள்

1254 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் எல்பன்ஸ் தேவாலயத்திற்கு மேலால் புதுமையான பறக்கும் பொருள் ஒன்று தென்பட்டதாகக் கூறப்பட்டது. 1741 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ஒரு பகுதிக்கு மேலாக வட்டவடிவத்தைவிட சற்று சரிவான மர்மப் பொருள் ஒன்று பறந்து விண்ணில் மறைந்ததாக யோசெப் பிரபு என்பவர் கூறியிருந்தார். மின்குமிழ் ஒன்றின் வடிவத்தில் பறக்கும் பொருள் ஒன்று

### விண்வெளி தூசுப்படல


வேற்றுக்கிரகம் ஒன்றில் இருந்து
நட்சத்திரம் ஒன்றில் உயிரினங்கள் உ
சாதகமான மூலங்கள் விஞ்ஞானிகள



வைல்ட் 2 வால் நட்சத்திரம்
கண்டுபிடிப்பு - 1978 இல்
பரப்பளவு - 5 கி.மீற்றர்கள்
தூரம் - 6.4 வருடங்கள் அளவு
கண்டுபிடித்த இடம் - செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையில்



கார்ட்டூன் மற்றும் திரைப்படங்களில் வருகின்ற ஒப்டிமஸ் பிரயிட் மற்றும் டிரான்ஸ்ஃபோமர்ஸ் ஆகிய ரொபோக்கள் சயிபிரடிரோன் என்ற கிரகத்திலிருந்து வந்த உயிரினமாக சித்தரிக்கப்படுகின்றது.



செவ்வாயில் இருந்து வந்ததாக நம்பப்படும் 'குள்ளர்கள்' என்ற ரொபோக்களை 'Mars Attacks' (மார்ஸ் எட்டேக்ஸ்) என்ற திரைப்படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கவாசிகளைக் கண்டுள்ளனரா?

### ...ரசுப்படல அசைவின் அணு கண்டுபிடிக்கப்பட்டது


...றில் இருந்து பூமியை நோக்கி வந்த வால் ...உயிரினங்கள் உருவாவதற்குத் தேவைப்படும் ...விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டன.



...ட்சத்திரம் ...இல் ...ர்கள் ...ர் அளவு ...செவ்வாய்க்கும் ...வியாழனுக்கும் ...இடையில்

2004 ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்ட விண்கலம் ஒன்றின் மூலம் நட்சத்திர துகல்கள் தேடும் முயற்சியின்போது மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**கிளய்சீன்**



- உயிரினங்களின் ஆரம்பமாக கருதப்படும் சாதாரண அமினோ அமில வகை 20 கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- மனிதனின் நுரையீரல் செயற்பாட்டின் முக்கிய பங்கு இதன் மூலமே நிகழ்கின்றன.
- பூமியில் உயிரினங்களின் பரம்பல் நடைபெற்றது. விண்ணில் இருந்து வந்த விண்கல்லின் பகுதியில் இருந்துதான் என்ற கோட்பாட்டை உறுதிப்படுத்த இது உதவியது.

190809 AFP

சுவிட்சர்லாந்திற்கு மேலால் பறந்ததாக 1762 ஆம் ஆண்டு கூறப்பட்டது. பிரான்ஸின் எம்பிரம் பகுதிக்கு மேலாக வட்டவடிவில் பறக்கும் தட்டுக்கள் பல பறந்ததாக 1820 ஆம் ஆண்டு தெரிவிக்கப்பட்டது.

1947 ஆம் ஆண்டு பறக்கும் தட்டொன்றை கண்ணுற்றதாக விமான ஓட்டி ஒருவர் கூறிய தகவலும் இருக்கின்றது. அவை பறக்கும் தட்டுக் களாக இருக்கும் என்று விமானி கூறியுள்ளார். தாம் பறக்கும் தட்டுக்களால் கடத்திச் செல்லப்பட்டதாக 1971 ஆம் ஆண்டு.இரண்டு அமெரிக்கர்கள் கூறியி ருந்தனர். அந்த உயிரினங்கள் அதிக உயரமும் மெல்லிய உடம்பையும் கொண்டதாக காணப்பட்ட தா[illegible]வர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு மர்மப் பொருட்கள், பறக்கும் தட்டுக்கள் பற்றிய ஏராள மான கதைகள் உள்ளன.

## பதில் வரும்போது நாம் இல்லை

1974 ஆம் ஆண்டு புவடோரிகாவில் அமைக்கப் பட்டுள்ள விண்வெளி அவதான நிலையத்தில் இருந்து அதிசக்தி வாய்ந்த விண்ஆய்வு தொலை நோக்கி ஊடாக எம் 13 என்று கூறப்படும் 3 லட்சம் நட்சத்திரங்கள் கூட்டாக இருக்கும் நட்சத்திரம் ஒன்றுக்கு சமிக்ஞை (Signal) அனுப்பப்பட்டது. இந்த நட்சத்திரம் இருக்கும் தூரத்தைக் கணிப்பிட்டபோது அதில் உயிரினங்கள் இருக்குமானால் அதுபற்றிய தகவல் பூமிக்கு கிடைப்பதற்கு இன்னும் 50,000 வருடங்கள் செல்லுமாம். அந்தளவு தூரத்தில் அந்த நட்சத்திரக் கூட்டம் அமைந்திருக்கின்றது.

## மில்லியன் கணக்கில் கண்டவை

கடந்த 40 வருட காலப்பகுதிக்குள் 1 லட்சம்பேர் வேற்றுக்கிரகங்களில் இருந்து வருவதாக நம்பப் படும் மர்மப் பொருட்களை, பறக்கும் தட்டுக்களை கண்டுள்ளனர். 1974 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இது தொடர்பாக கருத்துக் கணிப்பொன்று நடத்தப்பட்டது. அதில் அநேகர் இத்தகைய மர்மப் பொருட்களைக் கண்டதாகக் கூறப்பட்டது.

## வெற்றிகரமான வருடம்

1952 ஆம் ஆண்டில் மட்டும் இவ்வாறான 1500 பறக்கும் தட்டுக்கள் வரை தெரிந்ததாக உலகின் பல பாகங்களில் இருந்தும் தகவல்கள் தெரிவிக்கப்பட் டன. சிலர் பறக்கும் தட்டுக்களாக கருதியவைகள் வித்தியாசமான உரு அமைப்பை உடைய விமானங்கள், முகிற்கூட்டங்கள், நட்சத்திரங்கள், செய்மதிகள் ஆகியவை என்பது புலனாகியது.

## சுவீடன் வானில் ரொக்கெட்

1964 ஆம் ஆண்டு சுவீடனுக்கு மேலாக பறக்கும் தட்டுக்களை அவதானித்ததாக 1000 தகவல்கள் உள்ளன. அதில் அதிகமானவர்கள் அவை ரொக்கெட் வடிவம் (Rocket) போன்றதா கும் என்று கூறியுள்ளனர். அவைபற்றிய மர்மங்கள் இதுவரையில் துலக்கப்படவில்லை.

## வேற்றுக்கிரக உயிர்களுக்காக உருவச்சிலை

ஈஸ்டர் தினத்தின் முக்கியத்துவம்மிக்க 'மோய்' உருவச்சிலை வேற்றுக்கிரகவாசிகளின் உதவியுட னேயே நிர்மாணிக்கப்பட்டதாக சிலர் நம்புகின்ற னர். ஆனாலும், இத்தகைய சிலைகள் வேற்றுக்கிரக வாசிகளின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவில்லை என்று விஞ்ஞானிகள் உறுதியாகக் கூறியுள்ளனர்.

## பறக்கும் தட்டுக்கள் தென்படும் நேரம்

பொதுவாக பறக்கும் தட்டுக்கள் இரவு 9மணி தொடக்கம் 10.30 வரையிலான நேரத்திற்குள் வானில் சஞ்சரிப்பதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு வருடத்திற்கு 40 தகவல்கள் வரையில் கிடைத்தவண்ணம் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், இத்தகைய வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய தகவல்களின் உண்மைத் தன்மை இன்று வரையில் உறுதிப் படுத்தப்பட்டதாக இல்லை. கற்பனையா நிஜமா என்று ஊகிக்க முடியா தளவுக்கு இந்த மர்மம் தொடரவே செய்கின்றது.

**எம்.எஸ்.அமீர் ஹுசைன்**



ஹொலிவூட் தயாரிப்பாளர் ஸ்டீவன் ஸ்பில்பர்க் தயாரித்த படமே 'ஈ.டி' என்ற படமாகும். உலகை அழிக்கும் வேற்றுக்கிரக உயிரினம் ஒன்றின் கதையே இது.




அமெரிக்காவில் புகழ் பெற்ற (X-File) எக்ஸ்பைல் திரைக்கதையில் பறக்கும் தட்டு ரகசியம், ஏரியா Si என்ற அமெரிக்கா படையின் ராணுவ தலைமையகம், வேற்றுக்கிரக வாசிகள் பூமியை ஆக்கிரமிக்க எடுக்கும் முயற்சி, அமெரிக்க அரச ரகசியம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.




'பிரேடடர்' என்ற வேற்றுக்கிரகம் தொடர்பான திரைப்படம். நல்லதும் தீயதுமான வேற்றுக்கிரக உயிரிலங்கள் பற்றிய கதைகள். 'ஏலியன்ஸ்' என்ற திரைக்கதையும் இத்தகைய பாத்திரத்தைக் கொண்டதாகும்.



சுபர்மேன் கதையும் இந்த வகையிலான விண்வெளிக்கதையாகும். அமெரிக்காவின் திரைகளிலும் தொலைக்காட்சிகள் மூலமாகவும் மக்கள் மனதை வென்ற திரைப்படம் இதுவாகும். கிரிப்டொன் என்ற கிரகம் அழிந்ததால் சுப்பர்மேன் பூமிக்கு வருவதாக இக்கதை அமைக்கப்பட்டுள்ளது.



வேற்றுக்கிரகவாசிகளும் அவற்றுக்கு எதிராக பூமியில் உள்ள மனிதர்களும் மேற்கொள்ளும் போராட்டம் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய திரைப்படமே 'இன்டிபென்டட் டே' திரைப்படமாகும். இந்தக் கதை பொக்ஸ் ஒபிஸ் சாதனை படைத்த திரைப்படமாகும்.




வேற்றுக்கிரகவாசிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பென்டென், பென்டென் ஏலியன்ஸ் என்ற கார்ட்டூன் சித்திரமும் சிறுவர்களிடையே மிகவும் பிரபல்யமாகியுள்ளது.




'டிஸ்ட்ரிக் 9' என்ற திரைப்படத்திற் காக தயாராகியுள்ள சுவரொட்டியாகும். நீல் பிளெம்கம்ப் என்பவர் இந்த திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனநிறைவு

திரங்கினி என்ற ஊரில் பைரவர் என்ற செல்வந்தர் இருந்தார். அவருக்குத் தான தர்மங்கள் செய்வது என்றால் பிடிக்கவே பிடிக்காது. சம்பாதிக்கின்ற பணத்தை தர்மங்கள் செய்து கொண்டிருந்தால், சொத்து சேர்க்க முடியாது என்று அவர் எண்ணினார். வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு பெருஞ்செல்வம் திரட்டிவிட்டால், முதுமைக் காலத்தில், அவற்றில் ஒரு சிறு பகுதியை தர்ம காரியங்களுக்குச் செலவிடலாம் என்று நினைத்தார். இவருக்கு நேர் எதிர் குணம் கொண்டவர் சின்னான். அவர் ஒரு கூலித்தொழிலாளி. குறைந்த வருமானமுள்ளவர். ஆனாலும் தனது வருமானத்தில் ஒரு சிறு பகுதியை அன்றாடம் ஏழை, எளியவர்களுக்கு தர்மம் செய்து விடுவார். இதனால், அவர் தனது வாழ்நாள் ம்முழுவதும் ஏழ்மை நிலையிலேயே இருந்தாலும், அதில் ஒரு மனநிறைவு அவருக்கு எப்பொழுதும் இருந்து கொண்டே இருந்தது. ஆரம்ப காலத்தில் பைரவரும், சின்னானும் சிநேகிதர்களாக இருந்தவர்கள். காலப்போக்கில் பிரிந்துவிட்டனர்.

வாழ்க்கைச் சூழ்நிலையில் இருவரும் வெவ்வேறு பாதையில் பிரிந்து விட்டாலும், அடிக்கடி அவர்கள் சந்தித்துக் கொள்ளவும் தவறவில்லை. அப்படிச் சந்திக்கும் பொழுதெல்லாம், "சின்னான்! தர்மம் செய். வேண்டாமென்று சொல்லவில்லை. உனக்குக் கிடைப்பதோ உன் குடும்பத்திற்கே போதாது. அதிலும் ஒரு சிறு பகுதியை தர்மம் செய்து விடுகிறாய். நீ இப்படியே செய்து கொண்டிருந்தால், உனது பிற்காலத் தேவைகளுக்கு என்னசெய்வாய்? முடிந்த அளவு பணத்தைசேமித்து வைத்து, பின்னாளில் தர்மம் செய்யலாம் அல்லவா?" என்று அறிவுரை சொல்வது போல் கூறுவார்.




சின்னானும், "பணத்தை நான் சேர்த்து வைக்க விரும்பவில்லை. பணம் சேர்த்துவைப்பது நமது வாழ்க்கையில் பெரிய சுமை. இந்தச் சுமையை சுமக்க நான் தயாரில்லை. நாம் செத்தால் நாம் பாடுபட்டுச் சேர்த்திருந்த பணமாக இருந்தாலும்கூட அது நம்முடன் வராது. தவிர நாம் சம்பாதிக்கின்ற பணமானது, முழுக்க முழுக்க நமக்கே சொந்தமன்று. அதில் ஒரு சிறு பகுதியை தர்மமும் செய்யவேண்டும் என்பது இறைவனின் நியதி. நான் இதைத்தான் செய்து கொண்டு, கூழோ, கஞ்சியோ குடித்துவிட்டு கடமையை செய்துவிட்ட திருப்தியில் சந்தோஷமாக இருக்கிறேன். இதிலிருந்து என்னால் ஒரு போதும் விடுபடவே முடியாது" என்று கூறுவார்.

காலங்கள் ஓடின.

வாழ்நாள் முழுவதும் சொத்துக்களை சேர்த்துக் கொண்டே இருந்தார் பைரவர். ஆனால், தர்மம் செய்யவேண்டும் என்ற விஷயத்தை மட்டும், "இன்னும் சிறிது காலம் போகட்டும்" என்று தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார்.

ஒருநாள் அவர் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்தார். என்ன நோய் என்று மருத்துவர்களுக்கே விளங்கவில்லை. அவரால் எழுந்து நடமாடக் கூட முடியாத அளவிற்கு அவரது கை, கால்கள் செயலற்றுப் போயின. அவர் கஷ்டப்பட்டு சேர்த்து வைத்த சொத்துக்களை பிள்ளைகளும் உற்றார் உறவினர்களும் இன்பமாக அனுபவிப்பதைக் கண்களால் மாத்திரம்தான் காண முடிந்தது. ஆனால், அவரால் அதை எடுத்து அனுபவிக்கவோ, பயன்படுத்தவோ முடியவில்லை.

"கடவுளே! கடைசி காலத்தில் தர்மம் செய்து கொள்ளலாம் என்று இருந்தேனே. ஒரு ஏழைக்குக் கூட உதவாமல் சேர்த்து வைத்த சொத்துக்களை இன்று ஆடம்பரமாக செலவு செய்கிறார்களே" என மனம் வருந்தினார்.

ஒருநாள் தர்மம் செய்ய முடியவில்லையே என்ற பெரும்மனக் குறையுடனேயே அவர் இறந்துவிட்டார்.

ஆனால், சின்னான், அந்த வயதிலும் நல்ல திடகாத்திரத்தோடு இருந்தார். நோய் நொடி எதுவும் அவரை நெருங்கவில்லை. கடவுள் இட்ட கடமையை அவ்வப்போது செய்து விட்டோம் என்ற நிம்மதியும் சந்தோஷமும் அவர் மனதை நிறைத்திருந்தது.

இறுதியில் ஒருநாள் எவ்வித நோயின் பாதிப்பும் இல்லாமல், மனக்குறை இல்லாமல் எவ்வித துன்பமும் இல்லாமல், இயற்கையான முறையில் மரணம் எய்தினார்.

எந்தக் காரியத்தையும் நாளை செய்வோம், நாளைக்குப் படிப்போம் என்று ஒத்திப் போடவே கூடாது. அன்றன்று செய்ய வேண்டியதை அன்றன்றே செய்தல் வேண்டும்.

## தகவல் களஞ்சியம்

**கிரீஸ்:** கிரீஸ் நாடு, 'அரசியல் ஆராய்ச்சி நிலையம்' என்று அழைக்கப்படுகிறது.

**புத்தமதம்:** புத்தமதம் கி.மு 4 ஆம் நூற்றாண்டில் தோன்றியது.

**சார்மினார்:** ஹைதராபாத்தில் உள்ள சார்மினார் கட்டடம், 'பிளேக்' நோயை ஒழித்ததைக் குறிக்கும் விதமாகக் கட்டப்பட்டது.

**ஆக்ரா கோட்டை:** ஆக்ராவில் உள்ள பிரபலமான கோட்டையைக் கட்டியவர் மொகலாய மன்னர் அக்பர்.

**சீனா:** காகிதப் பணத்தை முதன் முதலில் வெளியிட்ட நாடு சீனா.

# வேட்டையாடும் விலங்கு

பூமியில் காணப்படுவதிலேயே பெரிய வேட்டையாடும் விலங்கு எது தெரியுமா? துருவக் கரடிதான். ஆர்ட்டிக் பெருங்கடலை ஒட்டிய பகுதிகளில் காணப்படும் துருவக் கரடி, 400 முதல் 680 கிலோ வரை எடை கொண்டது. ஆண் துருவக் கரடியுடன் ஒப்பிடும்போது பெண் கரடி அதில் பாதியளவே இருக்கும். துருவக் கரடி, பழுப்பு நிறக் கரடியுடன் நெருங்கிய தொடர்புடையது. துருவக்கரடி குளிர்ப்பிரதேச சூழலுக்கு ஏற்ற உடல் நிலையைக் கொண்டுள்ளது. இது தரையில் பிறந்தாலும், உறைநிலைக் கடலிலேயே பெரும்பாலான நேரத்தைக் கழிக்கிறது. எனவே, இது 'கடல் பாலூட்டி' என்றே கருதப்படுகின்றது. சுற்றிலும் தண்ணீர் சூழ உறைந்த கடல் பகுதிகள் இவற்றின் விருப்பமான வாழிடமாகும்.



துருவக் கரடிகளில் 19 துணைப்பிரிவுகள் உள்ளன. இவை ஆளரவமற்ற ஆர்ட்டிக் பெருங்கடல் மற்றும் டென்மார்க், நோர்வே, ரஷ்யா, அமெரிக்கா (அலாஸ்கா), கனடா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன. 'சீல்' மீன்களே இவற்றின் முக்கிய உணவாகும்.

தற்போது, உலகம் முழுவதும் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரையான துருவக்கரடிகளே இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. வரைமுறையற்ற வேட்டை மற்றும் உலக வெப்பநிலை உயர்வினால் பனிப் பாறைகள் உருகுவதன் காரணமாக, அழிந்துவரும் விலங்குகள் பட்டியலில் துருவக்கரடி இனமும் இடம் பெற்றுள்ளது. எனவே, இவ் விலங்கைக் காக்கும் முயற்சியில் உலக நாடுகள் தற்போது ஈடுபட்டுள்ளன.



## அன்பு காட்ட வேண்டும்

*நன்றி என்னும் பண்பையே*
*நாயைப் பார்த்து அறியலாம்*
*அன்னை போல பிறரிடம்*
*அன்பு காட்ட வேண்டுமே!*
*தேனைச் சேர்க்கும் தேனீ போல*
*சேர்த்து வைக்கப் பழகலாம்.*
*மீனைப் போல நீரிலே*
*மிதந்து நீந்த முயலலாம்!*

*எறும்பைப் போல வரிசையாய்*
*எங்கும் செல்ல வேண்டுமே*
*குறும்பு செய்யும் செயலையே*
*குறைத்துக் கொள்ளல் நல்லதே!*

*இனிய சொற்கள் கூறினால்*
*இன்பம் அதிகம் காணலாம்*
*குனிந்து அடங்கும் பண்பினால்*
*குறை களைந்து வாழலாம்!*

# வினோத யோசனை

1869 ஆம் ஆண்டு லண்டனைச் சேர்ந்த ஒருவருக்கு வித்தியாசமான ஒரு யோசனை உதித்தது. தங்கள் நாட்டில் மேற்கத்திய பாணிக் கழிவறை கோப்பையில் சிலர் ஏறி நின்று இயற்கைக் கடனைக் கழிப்பதை அவர் உணர்ந்தார். அதைத் தவிர்க்கும் வகையில், உட்காரும் இடத்தில் கோப்பையின் மேல்வட்டத்தில் சிறு உருளைகளை அவர் பொருத்தினார். அதன்பின், கோப்பையின் மீது சௌகரியமாக உட்கார முடிந்தது. இதனால், கோப்பையின் மீது ஏறி நிற்பவர்களுக்குக் கால் வழுக்கி, ஒரு கால் உள்ளே மாட்டிக் கொண்டது. எனினும், நாளடைவில் அவர்கள் தாமாகவே திருந்தினார்கள்.



## நூல்களும் நூலாசிரியர்களும்

| | |
|---|---|
| திருக்குறள் | - திருவள்ளுவர் |
| பெரிய புராணம் | - சேக்கிழார் |
| சீறாப்புராணம் | - உமறுப்புலவர் |
| திருவாசகம் | - மாணிக்கவாசகர் |
| இராமாயணம் | - வால்மீகி |
| சிலப்பதிகாரம் | - இளங்கோ அடிகள் |
| மணிமேகலை | - சீத்தலைச்சாத்தனார் |
| சீவக சிந்தாமணி | - திருத்தக்கதேவர் |
| நன்னூல் | - பவணந்தி முனிவர் |
| தேம்பாவணி | - வீரமாமுனிவர் |
| கலிங்கத்துப்பரணி | - சயங்கொண்டார் |
| நளவெண்பா | - புகழேந்திப் புலவர் |
| வீரசோழியம் | - புத்தமித்திரனார் |
| திருமந்திரம் | - திருமூலர் |
| வளையாபதி | - நாதகூத்தனார் |
| மகாபாரதம் | - வில்லிப்புத்தூரர் |
| திருப்புகழ் | - அருணகிரிநாதர் |
| மகாவம்சம் | - மகாநம |
| சத்தியசோதனை | - மகாத்மா காந்தி |
| பாஞ்சாலிசபதம் | - சுப்ரமணிய பாரதியார் |
| கீதாஞ்சலி | - ரவீந்திரநாத் தாகூர் |
| நன்னெறி | - சிவப்பிரகாச சுவாமிகள் |
| நல்வழி | - ஔவையார் |
| நாலடியார் | - சமண முனிவர் |
| திருவிளையாடல் புராணம் | - பரஞ்சோதிப் புலவர் |

தொகுப்பு: சண்முகம் பரிமலா,
தரம் - 11, நு/ஹ/விக்னேஸ்வரா த.ம.வித்., ஹேவாஹெட்ட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3259
பா.மதுர்ஷன், தரம் - 4$^{C}$, இறம்பைக்குளம் ம.ம.வித்., வவுனியா.


அங்.இல: 3260
எம்.எஃப்.நஸ்மீர், தரம் - 7, அல்-மின்ஹாஜ் தே.பாட., ஹபுகஸ்தலாவை.


அங்.இல: 3261
சி.ராம்குமார், தரம் - 7$^{G}$, யாழ்ப்பாணம் ம.கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3262
ஆர்.எம்.ருவைனா, தரம் - 5, அல்-அகீல் மு.ம.வித்., கொடியாகும்புர.


அங்.இல: 3263
எம்.ஸப்னாஸ்,தரம் - 11, க/தெழும்புகஹவத்த மு.வித்., அக்குறனை-06.


அங்.இல: 3264
ஸ்ரீ.லக்ஷாயினி, தரம் - 7$^{C}$, கொக்குவில் இ.கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3265
எஃப்.ரிஃப்கானா, தரம் - 4$^{D}$, மாளிகாஹேன ம.வித்., பேருவளை.


அங்.இல: 3266
ர.நிதர்சன், தரம் - 6$^{C}$, ஸ்ரீ கோணேஸ்வரா இ.கல்., திருகோணமலை.


அங்.இல: 3267
எஸ்.நரேன், தரம் - 7$^{B}$, றனபிம றோயல் கல்., கண்டி.


அங்.இல: 3268
பா.பிரசாந், தரம் - 7, சென்.ஜோன்ஸ் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3269
எம்.அக்மல், தரம் - 8$^{B}$, அந்-நூர் தே.பாட., மட்டக்களப்பு.


அங்.இல: 3270
ஆர்.எம்.ரஷிதுஸ் சபா, தரம் - 5$^{B}$, அ/கனேவல்பொல மு.ம.வித்.,கனேவல்பொல.


அங்.இல: 3271
என்.ஏ.கப்பார், தரம் - 10, தடல்ல அல்-முபாரக் வித்., காலி.


அங்.இல: 3272
எஸ்.அபிதா ஸ்ரீ, தரம் - 3$^{A}$, நஸ்ரியா ம.கல்., சிலாபம்.


அங்.இல: 3273
எம்.மும்தாஜ் பேகம், உயர் தரம், நுரைச்சோலை.


அங்.இல: 3274
க.அபிராமி, தரம் - 5, உடுவில் ம.கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3275
என்.பவித்திரன், தரம் - 3, கே/ஸ்ரீ கதிரேசன் த.ம.வித்., தெரணியகல.


அங்.இல: 3276
எம்.எம்.ரிஸான், தரம் - 9, ஸ்ரீ ராஸிக் ஃபரீட் மு.ம.வித்., பண்டாரவளை.


அங்.இல: 3277
ச.ஐங்கரன், தரம் - 9$^{C}$, ஸ்ரீ முருகன் த.வித்., செட்டிக்குளம்.


அங்.இல: 3278
பா.சுதாகரன், உயர் தரம், கிரான் ம.வித்., மட்டக்களப்பு.

# எரிமலையின் மீதுள்ள தொலைநோக்கி

உலகின் மிகப்பெரிய தொலைநோக்கி ஒன்று ஸ்பெய்ன் நாட்டின் கனாரி தீவுகளில் ஒன்றான லா-பால்மா தீவில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தொலைநோக்கி 10.4 மீற்றர் உயரமுடையது.

கடல் மட்டத்தில் இருந்து 2 ஆயிரத்து 267 மீற்றர் உயரத்திலுள்ள இத்தொலைநோக்கி, தணிந்து போன எரிமலைக் குன்று ஒன்றின் மேலேயே அமைக்கப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு ஏறக்குறைய 100 நிறுவனங்களைச் சேர்ந்த நிபுணர்கள் இணைந்து இத்தொலைநோக்கியை சமீபத்தில் கட்டி முடித்துள்ளனர்.



இத்தொலைநோக்கி நட்சத்திரங்களின் தோற்றம், விண்ணில் நடைபெறும் பெரு·வெடிப்புக்கள் ஆகியவற்றை ஆராயும் எனவும் கூறப்படுகின்றது.

# வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 06.01.2010 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்
குறுக்கெழுத்துப் போட்டி இல: 25
'விஜய்',
த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ந | த் | தா | ர் | | 2தை |
| ட் | | | | 3பா | ரி |
| பு | | | 4வ | ல் | ய |
| | 5கீ | | ல் | | ம் |
| 6கொ | ரி | ல் | லா | | |
| சு | | | 7ரை | ம | தா |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 23 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு**
ம.ராம்ராஜ்,
51, E.S பெர்னாண்டோ மாவத்தை,
கொழும்பு-06.

**இரண்டாம் பரிசு**
பாத்திமா யும்னா,
183/B தவ்லகல வீதி,
பேராதனை.

**மூன்றாம் பரிசு**
ஜூட் அந்தனி,
144, மெயின் வீதி,
கொட்டகலை.

### ஆறுதல் பரிசுகள்

வி.மேரி நிதுஷா,
01, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

எம்.என்.எம்.ஹலிமா,
233/E மாபேரிய,
உக்குவெல.

சி.வினோத் ருக்ஷான்,
24, காமினிபுர,
ஹட்டன்.

எம்.பி.எப்.ஆதிலா,
30, பறங்கி வீதி,
கல்பிட்டி.

சி.நிஜாசினி,
22, கதிரேசு ரோட்,
வைரவப் புளியங்குளம்,
வவுனியா.

எம்.எம்.சப்னா,
21A, மெரக்கலை வீதி,
இகல/கொட்டாரமுல்லை.

ஏ.பிரயன்,
25/3 சேர்ச் ரோட்,
பலாங்கொடை.

எஸ்.டி.எம்.ஷாபிதீன்,
40, மே வீதி,
ஹம்பாந்தோட்டை.

ரா.சபிலாஷா,
பூனாகலை வீதி,
கொஸ்லாந்தை.

எம்.ஐ.எம்.அம்ரா,
5/1 பெனிதுடு முல்லை வீதி, நாவலப்பிட்டி.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | |
| ரோ | | | | | |
| | | வீ | | | |
| | 4 | | 5 சோ | | 6 |
| 7 | | | | | |
| ரீ | | | 8 வை | | |

பெயர் : ..............................
வீட்டு முகவரி : ..............................
..............................
தொலைபேசி இல : ..............................
பாடசாலை : ..............................
அருகிலுள்ள நகரம் : ..............................
மாவட்டம் : ..............................

**மேலிருந்து கீழ்**

1. பகைவர் என்றும் சொல்லலாம்.
2. உலக பந்தபாசங்களிலிருந்து விலகி வாழ்பவர்.
3. ஏதாவதொரு குழுவை வழிநடத்திச் செல்பவர்.
4. இனிமையும் மருத்துவ குணமும் நிறைந்தது.
5. திருட்டு. (தலைகீழாக இருக்கிறது)
7. தந்திரத்துக்கு இதனை உதாரணமாகக் கூறுவர்.

**இடமிருந்து வலம்**

1. சேவையை, சாதனையைப் பாராட்டி வழங்கப்படுவது.
3. இடையூறு என்றும் சொல்லலாம்.
5. அசதியான நிலை.
7. நாயிடம் உள்ள நற்குணங்களில் பிரதானமானது.
8. பலவற்றின் கலப்படம். (திரும்பி இருக்கிறது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவனல்லையை சேர்ந்த ரிஸ்வி-பரீனா தம்பதியரின் செல்வப்புதல்வி ஃபாத்திமா ரிஸ்லா, 27.12.2009 அன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

மாவனல்லை-உயன்வத்தையைச் சேர்ந்த ரிஸ்வி-பரீனா தம்பதியரின் செல்வப்புதல்வி ஃபாத்திமா ஹப்ஸா, 30.12.2009 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## கிறிஸ்மஸ் மரம்



ஆர்.மதுமசா, தரம் - 5, ஹைட்றி, றொசல்ல.



எஃப்.பர்ஷான், தரம் - $4^{B}$, நோர்வூட் த.வித்., நோர்வூட்.



கி.ஜெனுசன், தரம் - 3, பொன்தீவுக்கண்டல் ரோ.க.த.ம.வித்., மன்னார்.

## பரிசுப் பொதியுடன் நத்தார் தாத்தா



எ.கிறிஸ்டின், தரம் - 10, சப்புமல்கந்த த.வித்., தெரணியகல.



எம்.என்.எஃப்.நஸ்லா, தரம் - $9^{C}$, ஸாஹிரா தே.பாட., கிந்தோட்டை.



ச.ஷியாம் தேவ், தரம் - $9^{A}$, இந்து தே.கல்., மாத்தளை.

## கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்



ஏ.எம்.எஃப்.நஜிபா, தரம் - $6^{B}$, அல்-ஷஃபா ம.வித்., பொல்கொல்ல.




ஹஸ்னா ஹனீஃபா, தரம் - $6^{C}$, ஹிஸ்புல்லாஹ் ம.கல்., குருணாகல்.




எஃப்.ரைஹானா ஹுஸைன், தரம் - $8^{G}$, நளீம் ஹாஜியார் ம.கல்., களுத்துறை.

## துடுப்பு மட்டையும் பந்தும்



எம்.ஜே.எம்.ஜஸீம், தரம் - $4^{C}$, அந்-நூர் ம.கல்., குருணாகல்.



பீ.எம்.சஹ்ரான், தரம் - $3^{E}$, பொலன்னறுவை மு.ம.கல்., பொலன்னறுவை.



எம்.ஐ.ஐ.ஸாரா, தரம் - 2, ப/அல்-பத்ரியா மு.ம.வித்., தியத்தலாவை.

## அப்துல் கலாமின் பொன்மொழிகள்

* கனவு காணுங்கள்; திட்டமிடுங்கள்; செயல்படுங்கள்.
* கனவு காண்பவர்கள் அனைவரும் தோற்பதில்லை; கனவு மட்டும் காண்பவர்கள்தான் தோற்கிறார்கள்.
* சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவை இல்லை. அவ்வாறே, துன்பங்களை சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வி இல்லை.
* உன் கைரேகையைப் பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே. ஏனென்றால், கை இல்லாதவனுக்குக்கூட எதிர்காலம் இருக்கிறது.
* கடவுளின் சோதனைக்கு ஆளாவது எல்லோரும் அல்ல. மாறாக, உன்னைப் போல சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகள் மட்டுமே.
* நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால், நமது இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும்.




கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு




எம்.ஜே.எஸ்.சுமையா, தரம் - 9, க/அல்-மினாஹ் மு.ம.வித்., கஹடபிடிய.



எம்.என்.நஸ்மியா, தரம் - $7^{A}$, அல்-அஸ்ஹர் மு.ம.வித்., திருகோணமலை.



எஸ்.விதூசன், தரம் - 3, சென்.ஜோன்ஸ் ம.வித்., கொழும்பு-5.



பீ.சசிகுமார், தரம் - $6^{B}$, மாறை/ஸாதாத் ம.வித்., கொடபிடிய.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

முடிவுத்திகதி 15.01.2010

### மார்ச் மாதத்துக்கான தலைப்புகள்

★ தரம் 1-5 - வாத்து அல்லது அன்னாசி
★ தரம் 6-8 - கப்பல் அல்லது கம்பளம் ஒன்றுக்கான அலங்காரம்
★ தரம் 9-11 - கடற்கரைக்காட்சி அல்லது கோழியும் குஞ்சும்

**அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!**

நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் காசோலை முறை மாற்றப்படவுள்ளது




பிரிட்டனில் பாவனையில் உள்ள காசோலை முறை 2018 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பணக்கொடுக்கல் வாங்கல் முறையில் காசோலை முறையே இதுவரை காலமும் பாதுகாப்பான ஒரு வழிமுறையாகக் கையாளப்பட்டு வருகின்றது. எனினும், இதில் நவீனத்துவத்தைப் புகுத்தும் அவசியம் ஏற்பட்டுள்ளதையடுத்தே தற்போதைய புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

21 ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி கண்டு வருகின்ற இந்த உலகில் வெறும் கடதாசித் தாளின் மூலம் பணக் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்வதைவிட இதில் மற்றுமொரு முன்னேற்றத்தைக் காணும் நோக்கிலேயே நவீன முறைகள் கையாளப்படவுள்ளன.

எனவே, 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதியின் பின்னர் பிரிட்டனில் காசோலைகள் செல்லுபடியற்றதாகிவிடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வங்கிகள் மூடப்படுகின்றன

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவின் காரணமாக இந்த ஆண்டில் மட்டும் அந்நாட்டில் 133 வங்கிகள் மூடப்பட்டுள்ளதாக செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

அமெரிக்காவில் உள்ள வங்கிகள் இவ்வாறு தொடர்ச்சியாக நட்டத்தை அடைந்து வருவதன் காரணமாக ஒவ்வொரு மாதமும் 11 வங்கிகள் என்ற வீத அடிப்படையில்




இந்த ஆண்டு 133 வங்கிகள் மூடப்பட்டுள்ளன.

இதன்படி, கடந்த 18 வருடங்களில் இந்த வருடம்தான் அதிக எண்ணிக்கையிலான வங்கிகள் மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# பிரிட்டனின் அடுத்த அரசராக வில்லியம்

## மகாராணியார் திட்டமிடுகிறார்





பிரிட்டனின் அடுத்த அரசராக இளவரசர் வில்லியம் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எலிஸபெத் மகாராணியார் தெரிவித்துள்ளார்.

27 வயதாகின்ற வில்லியம்ஸிடம் சில பொறுப்புக்களை ஒப்படைக்கும் நடவடிக்கைகளை மகாராணியார் தற்போதே ஆரம்பித்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. பிரிட்டிஷ் அரசிலுள்ள மேல்நிலை அதிகாரியொருவருக்கு மகாராணியார் எழுதியுள்ள கடிதத்தின் ஊடாகவே இந்த விபரங்கள் வெளியாகியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதற்கமைய, மகாராணியார் அடுத்த வருடம் கலந்து கொள்ளவுள்ள நிகழ்வுகளில் இளவரசர் வில்லியம்ஸை கலந்து கொள்ளச்செய்யும் திட்டத்தையும் அவர் கொண்டுள்ளார்.

83 வயதாகின்ற மகாராணியார், அடுத்த அரசர் யார் என்பதில் சிக்கல்கள் ஏற்படக்கூடாது என்பதற்காகவே, உரிய காலத்தில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என்றும் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

**அற்லஸ் கேள்வி - 236**

**கேள்வி:** இந்த வருடம் அமெரிக்காவில் எத்தனை வங்கிகள் மூடப்பட்டுள்ளன?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 236,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 234 இன் சரியான விடை: 192**

**பரிசு பெறுவோர்**

பாத்திமா இம்ரா,
ஒழுங்கை-9, 37, போல்ஸ் வீதி, புத்தளம்.

அருளானந்தம் நிகிலா,
மாரியம்மன் கோயில் வீதி, களுவாஞ்சிக்குடி-09.

பாத்திமா முர்சிதா,
65/19 சென் ஜோசப் வீதி, கொழும்பு-14.



# தனித்துவத்தை இழக்கும் 'பைக்கால்' ஏரி

உலகிலேயே மிகவும் விசாலமானதும் கூடிய ஆழம் கொண்டதுமான ஏரியாக கருதப்படுவது சைபீரியாவிலுள்ள 'பைக்கால்' ஏரியேயாகும். இதன் ஆழம் 744.4 மீற்றர்களாகும். (2,442 அடி), நீளம் 395 மைல்கள், அகலம்-50 மைல்கள் 336 கிளை ஆறுகள் இந்த 'பைக்கால்' ஏரியுடன் தொடர்புபட்டிருப்பதும் இதன் சிறப்பம்சமாகும்.

உலகில் மிகவும் பழைமைமிகு ஏரியாக கருதப்படுகின்ற இந்த 'பைக்கால்' ஏரியானது 25 மில்லியன் வருடங்கள் பழைமை வாய்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். 'பைக்கால்' ஏரியுடன் சம்பந்தப்பட்ட பகுதிகளில் 1,700 இற்கும் மேற்பட்ட பல்வேறு வகையிலான நீர்தாவரங்கள் உள்ளதுடன் 52 வகையிலான மீனினங்களும், 250 இற்கும் மேற்பட்ட 'நெத்தலி' மீன் இனங்களும் காணப்படுகின்றன.

இந்த ஏரி எப்போதும் மிகவும் தெளிந்த நீருடன் சுத்தமாகவே காணப்படும். இதற்குக் காரணம் 'கைப்பலென்ஸிஸ்' என்ற ஒருவகை சின்னஞ்சிறு உயிரினமேயாகும். இந்த உயிரினமானது ஏரியிலுள்ள கடற்பாசிகள், பக்ற்றீரியாக்கள் போன்றவற்றை தமது ஆகாரமாகக் கொள்கின்றமையால் நீர்நிலையானது குறிப்பிட்டவாறு தெளிவாகவும் சுத்தமாகவும் காணப்படுகின்றது.

அநேகமாக இயற்கைப் படைப்புக்களிலுள்ள சிறப்புத்தன்மைகள், அதே இயற்கைப் படைப்பின் அழிவிற்கும் காரணமாக அமைந்துவிடுவதுண்டு.

'பைக்கால்' ஏரிக்கும் அந்த நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது, இந்த ஏரியில் 'செலியுலோஸ்' என்ற ரசாயனப் பொருள் காணப்படுகின்றது. ஜெட் மற்றும் ஆகாய விமானங்களின் சில்லுகளை (டயர்களை) தயாரிப்பதற்கு இந்த 'செலியுலோஸ்' ரசாயனம் மிகவும் அவசியமான ஒரு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, இதனைப் பயன்படுத்தி விமான டயர்களைத் தயாரிக்கும் உற்பத்தி நிறுவனங்கள் தமது வசதிக்காக மேற்படி 'பைக்கால்' ஏரிக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளமையாலும் அந்த நிறுவனங்களிலிருந்து வெளிவருகின்ற கழிவுகள் 'பைக்கல்' ஏரியில் கலப்பதனாலும் இந்த ஏரி அசுத்தமடைந்து வருகின்றது. இதனால், அப்பகுதியில் மீன்களையும் காணமுடிவதில்லை. சிலர் இப்பகுதியை 'குப்பைக் கிடங்கு' என்றும் அடையாளப்படுத்துகின்றனர். ஆரம்பத்தில் 'சைபீரியாவின் மாணிக்கம்' என்று கருதப்பட்ட 'பைக்கால்' ஏரியை பாதுகாப்பதற்காக அந்நாட்டினர் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையில் நடைபெறும் இன்னும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

අම්මා: පුතා හෙට නේද සම්මුඛ පරීක්ෂණය?
புதா ஹெட நேத சம்முக பரீக்ஷணய?
அம்மா: மகன் நாளைக்குத்தானே நேர்முகப் பரீட்சை?

පුතා: ඔව් අම්මේ.
ஒவ் அம்மே.
மகன்: ஆம் அம்மா.

අම්මා: ඔයාගේ සහතික ඔක්කොම ලෑහැස්ති කරගත්තද?
ஒயாகே சஹதிக ஒக்கொம லெஹெஸ்தி கரகத்தத?
அம்மா: உங்களுடைய சான்றிதழ்களை ஆயத்தப்படுத்தினீர்களா?

පුතා: ඔව් අම්මේ සහතික ඔක්කොම ගත්තා.
ஒவ் அம்மே சஹதிக ஒக்கொம கத்தா.
மகன்: ஆம் அம்மா எல்லா சான்றிதழ்களையும் எடுத்துவிட்டேன்.

උප්පැන්න සහතිකය.
உப்பென்ன சஹதிகய.
பிறப்புச் சான்றிதழ்.

අධ්‍යාපන සහතික.
அத்யாபன சஹதிக.
கல்விச் சான்றிதழ்கள்.

ක්‍රීඩා සහතික.
க்ரீடா சஹதிக.
விளையாட்டுச் சான்றிதழ்கள்.



ග්‍රාමසේවක සහතිකය.
க்ராமசேவக சஹதிகய.
கிராம சேவகர் சான்றிதழ்.

මේ ඔක්කොම ලෑහැස්තියි.
மே ஒக்கொம லெஹெஸ்திய்.
இவையெல்லாம் ஆயத்தமாக இருக்கின்றன.

අම්මා: පුතා හෙට කලබල නැතිව අහන දේවල්වලට උත්තර දෙන්න.
புதா ஹெட கலபல நெதிவ அஹன தேவல்வலட உத்தர தென்ன.
அம்மா: மகன் நாளைக்கு அவசரப்படாமல் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு பதில்களைச் சொல்லுங்கள்.

පුතා: මම දන්නවා අම්මේ, මට බයක් නැහැ.
மம தன்னவா அம்மே, மட பயக் நெஹெ.
மகன்: எனக்குத் தெரியும் அம்மா, எனக்குப் பயம் இல்லை.

අම්මා: පුතාට ඔය රැකියාව ලැබෙයි.
புதாட ஒய ரெகியாவ லெபெய்.
அம்மா: மகனுக்கு அந்தத் தொழில் கிடைக்கும்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: பிறப்புச் சான்றிதழ் எடுத்துவிட்டேன்.
උප්පැන්න සහතිකය ගත්තා.

i. எல்லாச் சான்றிதழ்களும் ஆயத்தமாக இருக்கின்றன.
........................................

ii. கேள்விகளுக்கு பதில்களைச் சொல்லுங்கள்.
........................................

iii. எனக்குப் பயம் இல்லை.
........................................






நிகழ்கால தனி வாக்கியங்களில் காணப்படுகின்ற, வினா நிலை (Interrogative), உடன்பாடு நிலை (Affirmative) மற்றும் எதிர்மறை நிலை (Negative) வாக்கியங்களை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Does your father go to office on Sundays? (Interrogative)
உனது தந்தை ஞாயிற்றுக்கிழமைகளில் அலுவலகத்துக்குப் போவதுண்டா? (வினா)

(ஆ) Yes, my father goes to office on Sundays. (Affirmative)
ஆம், எனது தந்தை ஞாயிற்றுக்கிழமைகளில் அலுவலகத்திற்குப் போவதுண்டு. (உடன்பாடு)

(இ) No, my father does not go to office on Sundays. (Negative)
இல்லை, எனது தந்தை ஞாயிற்றுக்கிழமைகளில் அலுவலகத்திற்குப் போவதில்லை. (எதிர்மறை)

---

(அ) Does your mother go to work? (Interrogative)
உனது தாய் வேலைக்குப் போவதுண்டா? (வினா)

(ஆ) Yes, my mother goes to work. (Affirmative)
ஆம், எனது தாய் வேலைக்குப் போவதுண்டு. (உடன்பாடு)

(இ) No, my mother does not go to work. (Negative)
இல்லை, எனது தாய் வேலைக்குப் போவதில்லை. (எதிர்மறை)

---

(அ) Does your brother read story books? (Interrogative)
உனது சகோதரன் கதைப்புத்தகங்கள் வாசிப்பதுண்டா? (வினா)

(ஆ) Yes, my brother reads story books. (Affirmative)
ஆம், எனது சகோதரன் கதைப்புத்தகங்கள் வாசிப்பதுண்டு. (உடன்பாடு)

(இ) No, my brother does not read story books. (Negative)
இல்லை, எனது சகோதரன் கதைப்புத்தகங்கள் வாசிப்பதில்லை. (எதிர்மறை)

---

(அ) Does your sister come here daily. (Interrogative)
உனது சகோதரி தினமும் இங்கு வருவதுண்டா? (வினா)

(ஆ) Yes, my sister comes here daily. (Affirmative)
ஆம், எனது சகோதரி தினமும் இங்கு வருவதுண்டு. (உடன்பாடு)

(இ) No, my sister does not come here daily. (Negative)
இல்லை, எனது சகோதரி தினமும் இங்கு வருவதில்லை. (எதிர்மறை)

---

(அ) Does your friend meet you daily? (Interrogative)
உனது நண்பன் தினமும் உன்னைச் சந்திப்பதுண்டா? (வினா)

(ஆ) Yes, my friend meets me daily. (Affirmative)
ஆம், எனது நண்பன் தினமும் என்னைச் சந்திப்பதுண்டு. (உடன்பாடு)

(இ) No, my friend does not meet me daily. (Negative)
இல்லை, எனது நண்பன் தினமும் என்னைச் சந்திப்பதில்லை. (எதிர்மறை)

---

(அ) Does your friend swim at night? (Interrogative)
உனது நண்பன் இரவில் நீந்துவதுண்டா? (வினா)

(ஆ) Yes, my friend swims at night. (Affirmative)
ஆம், எனது நண்பன் இரவில் நீந்துவதுண்டு. (உடன்பாடு)

(இ) No, my friend does not swim at night. (Negative)
இல்லை, எனது நண்பன் இரவில் நீந்துவதில்லை. (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்துக்காக விளையாடவே விரும்புகிறேன்

## -பிளின் டொஃப்



இங்கிலாந்து அணியில் இடம்பெறுவதற்காகவே தான் சத்திரசிகிச்சை மேற்கொண்டதாகவும் இங்கிலாந்து அணியில் விளையாடுவதே தனது முதல் தெரிவு என்றும் இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரரான பிளின் டொஃப் தெரிவித்துள்ளார்.

பணத்திற்காக ஐ.பி.எல் போட்டிகளில் கலந்து கொள்வதற்கே இவர் முக்கியத்துவம் அளிக்கின்றார் எனவும், இங்கிலாந்து அணியில் விளையாடுவதில் ஆர்வம் காட்டவில்லை என்றும் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமைக்கு பதிலளித்துள்ளபோதே மேற்கண்டவாறு பிளின் டொஃப் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கருத்துத் தெரிவித்துள்ள பிளின் டொஃப், இங்கிலாந்துடனான ஒப்பந்தத்தை இழந்துள்ளபோதிலும், இங்கிலாந்துக்காக விளையாடுவதிலேயே தனது ஈடுபாடு அதிகமாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாகத்தான் காலில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்ததாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, இங்கிலாந்துக்காக ஒருநாள் போட்டிகள் 'டுவெண்டி டுவெண்டி' போட்டிகளில் கலந்துகொள்ள விருப்பத்துடன் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.



# தலைமைப் பதவிக்கு அடிபடாதீர்

## -மியான்டாட்

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் தலைவர் பதவிக்காக சர்ச்சைப்படுவதைத் தவிர்த்துவிட்டு, விளையாட்டில் முழுமையாக கவனத்தை செலுத்துவதே நல்லது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஜாவிட் மியான்டாட் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பாகிஸ்தான் அணியில் தலைமையை மாற்றுவது வழக்கமாகவே இருந்து வருகின்றது. எனவே, இப்பதவிக்கு ஸ்திரமான ஒரு தலைவர் இல்லாத நிலையில் வீரர்கள் பலரும் தலைமைப் பதவியை குறி வைத்துப் போட்டாபோட்டியுடன் நடந்து கொள்கின்றமையால் அணியை அது பலவீனப்படுத்தி விடுகின்றது. எனவே, இதனைக் கருத்திற்கொண்டே மியான்டாட் மேற்கண்ட கருத்தினைக் கூறியுள்ளார்.

திறமை உள்ளவர்களுக்கு அந்த வாய்ப்பு இயல்பாகவே கிடைக்கும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐ.பி.எல். இல் இனி பத்து அணிகள்

2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஐ.பி.எல் போட்டிகளில் இன்னும் இரண்டு புதிய அணிகள் சேர்க்கப்படவுள்ளன. அதன்படி, இந்த இரண்டு அணியில் ஒவ்வொரு அணியும் ஆகக் குறைந்த விலையாக 1.251 கோடி ரூபாவிற்கு ஏலம் விடப்படவுள்ளன.

ஏற்கனவே, எட்டு அணிகள் ஐ.பி.எல். இல் இடம் பெற்றுள்ள நிலையில் புதிய அணிகளுடன் அந்த எண்ணிக்கை பத்தாக அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்மூலம் போட்டிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படுகின்ற போதிலும் சர்வதேச போட்டிகளுக்கு பாதகம் வராதவகையில் கால அட்டவணை தயாரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஸி வெற்றி



அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையேயான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா வெற்றி கொண்டுள்ளது.

தொடரில் முதலாவது போட்டியில் ஆஸி வெற்றி பெற்றிருந்ததுடன் இரண்டாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இதன்படி, மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் 35 ஓட்டங்களால் ஆஸி வெற்றி பெற்றதன் மூலம் தொடரைக் கைப்பற்றியது.

**முதல் இன்னிங்ஸ்**
அவுஸ்திரேலியா - 520/7
மே.இ.தீவுகள் - 312
இரண்டாவது இன்னிங்ஸ்
அவுஸ்திரேலியா - 150
மே.இ.தீவுகள் - 323

# ஐ.பி.எல். வடிவில் ஆஸியிலும் போட்டி

இந்தியாவில் அண்மைக்காலமாக நடத்தப்பட்டு வருகின்ற இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) போட்டிகளைப் போன்று 'டுவெண்டி டுவெண்டி' போட்டிகளை நடத்துவதற்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவின் நகர மட்டத்திலான அணிகளே இதில் போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி, கிட்டத்தட்ட இதில் 31 போட்டிகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


வீட்டிலிருநதே ஆங்கிலம் கற்க இலகு வழி.
ENGLISH HOME STUDY PACK

ஆங்கிலத்தில் அழகாக பேச வேண்டும் என்பது அனைவரினதும் ஆசை.ஆனால் வீட்டை விட்டு வெளியே சென்று கற்க நேரம் இல்லாத மாணவர்கள்,இல்லத்தரசிகள், தொழில் புரிபவர்கள் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து இருப்பவர்கள்இளைஞர்கள் யுவதிகள் அனைவருக்கும் வீட்டிலிருந்தே ஆங்கிலம் க்றக அறிமுகமாகிறது.

English Home Study Pack இல் அடங்குபவை.

English Study Pack Rs: 990/- only.

ஆங்கில பேச்சு பயிற்சி புத்தகங்கள் -6 (ஆங்கில பேச்சு பயிற்சி,இலக்கணம்,கவிதைகள் குறுக்கெழுத்து போட்டி, கடிதம் எழுதுதல் , சிறுகதைகள், கட்டுரைகள் உள்ளடக்கிய புத்தகம் )

The Necklace Story Book
த நெக்லஸ் சிறுகதை புத்தகம்.

ஆங்கில பேச்சு பயிற்சி VIDEO CD

ஆங்கில வாசிப்பு பயிற்சி AUDIO CD

அழகிய வண்ண BAG

விடை எழுதும் பத்திரங்கள்

பாடநெறி முடிவில்
Cerficate In English
சான்றிதழ் வழங்கப்படும்.

7பாடப் புத்தகங்களிலும் காணப்படும் பயிற்சிகளுக்கு விடைகளை எழுதி அனுப்ப வேண்டும்.அவைகளை பிழை திருத்தி உங்களுக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்படும்.

Home Study Pack ஒன்றை பெறுவது எப்படி ?

நீங்கள் Study Pack ஐ பெற விரும்பின் பின்வருமாறு SMS செய்யுங்கள்.
SRS இடைவெளி உங்கள் பெயர் முகவரி வயது
0777-15 18 18 SMS செய்யுங்கள்.
Study pack அருகே இருக்கும் தபால் கந்தோருக்கு அனுப்பி வைக்கப்படும் பின்னர் ரூ 990/-செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அல்லது
அருகே இருக்கும் பின்வரும் வங்கி ஒன்றில்
Bank Of Ceylon - 9956240
Commercial - 80-400-52 644
Sampath - 1007-5019- 9539
M.H.M.Ramzan Director Jei என்ற பெயரில் ரூ 900/-செலுத்தி விட்டு உங்கள் விபரங்களை அனோஜா - 0814-92 91 93 இலக்கத்திற்கு அறிவிக்கவும்.
Study Pack வீட்டுக்கே அனுப்பி வைக்கப்படும். தபால் நிலையத்திற்கு செல்ல தேவை இல்லை.

English Home Study Pack
# 4.a.a.Dharmasena Mw,Kandy. 0814-829193


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாதைச் சிறுமி

ரஷ்ய நாட்டுக்கதை 01



உலகத்தில் நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள். சிலர் அவ்வளவு நல்லவர்கள் அல்லர். தங்களது கெட்டதன்மைகளுக்கு வெட்கப் படாதவர்களும் இருக்கிறார்கள் .

அநாதைச் சிறுமி இப்படிப் பட்ட கெட்டவர் கள் உள்ள குடும்பத்தில் வாழ நேரிட் டது. அவர்கள் அவளை எடுத் துச்சென்று வளர்த்து அவளால் தாங்க முடியாத நிலை வரை வேலை வாங்கினார்கள். அவள் நூற்றாள், நெய்தாள், வீட்டு வேலைகளைச் செய்தாள். கூப்பிட்ட குரல் அத்தனைக்கும் பதில் சொல்ல வேண்டியிருந்தது.

அந்த வீட்டு எசமானிக்கு மூன்று புதல்விகள் இருந்தனர். மூத்தவளுக்கு ஒரு கண். இரண்டாமவளுக்கு இரண்டு கண்கள். மூன்றாமவளுக்கு மூன்று கண்கள். மூன்று சகோதரிகளும் நாள் முழுக்க ஒன்றும் செய்யாது படலை அருகே அமர்ந்து தெருவில் செல்வோரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இதேநேரம் அநாதைச் சிறுமி அவர்களுக்காகப் பின்னினாள், நூற்றாள், நெய்தாள். பதிலுக்கு அன்பான வார்த்தை எதையும் அவள் கேட்கவில்லை.

சில நேரங்களில் அநாதைச் சிறுமி வெளியே களத்திற்குள்ளாகச் செல்வாள். தனது புள்ளிப் பசுவைக் கட்டிப்பிடித்து, தனது கவலைகள் அனைத்தையும் அதனிடம் கூறுவாள். "புள்ளிப் பசுவே! அவர்கள் என்னை அடிக்கிறார்கள். திட்டுகிறார்கள். உண்ணப் போதுமான உணவு எனக்குத் தருவதில்லை. அழக்கூட விடுவதில்லை. நாளைக்குள்ளாக நான் நூல் நூற்று, துணி நெய்து, சலவை செய்து, முடிக்க வேண்டி இருக்கிறது'' என்று கூறுவாள்.

புள்ளிப்பசு பதில் பேசும்,

''அழகியே! எனது ஒரு காதுக்குள் நுழைந்து மறு காதின் வழியாக வெளியே வா.... உனக்கு அளிக்கப் பட்ட வேலைகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டு விடும்'' புள்ளிப்பசு சொன்னபடி நிகழ்ந்தது.

அநாதைச் சிறுமி பசுவினுடைய ஒரு காதுக்குள் நுழைந்து மறுகாதின் வழியாக வெளியே வருவாள். அவ்வளவுதான் அங்கே துணி நெய்யப்பட்டு, சலவை செய்யப்பட்டு, சுருட்டப்பட்டுக் கிடக்கும்.அநாதைச் சிறுமி துணிச் சுருள்களை தனது எசமானிடம் எடுத்துச் செல்வாள். அவளோ அவற்றை உற்றுப் பார்த்து விட்டு முணுமுணுத்தவாறு பெட்டியில் வைப்பாள்.

பின்னர் அநாதைச் சிறுமிக்கு மேலும் அதிக வேலைகளைத் தருவாள். அநாதைச் சிறுமி புள்ளிப் பசுவிடம் சென்று, அதைக் கட்டிப் பிடித்து, தடவிக் கொடுப்பாள். ஒரு காதுக்குள் நுழைந்து மறு காதின் வழியாக வெளியே வந்து தயாரான துணியைத் தனது எசமானியிடம் திரும்பவும் எடுத்துச் செல்வாள்.

ஒருநாள் கிழவி தனது மூத்த மகளை அழைத்துச் சொன்னாள், ''என் அருமைக் குழந்தாய்! போய் அந்த அநாதைப் பெண்ணுக்கு யார் உதவி செய்வது என்று பார். நூல் நூற்று, துணி நெய்து, மடித்துத் தருவது யார் என்று பார்''

கிழவியின் மூத்த மகள் அநாதைச் சிறுமியுடன் காட்டுக்கும் வயலுக்கும் சென்றாள்.ஆனால் தன் தாயினுடைய கட்டளையை மறந்து வெயிலில் அலைந்து களைத்துப்போய் புல்தரையில் படுத்தாள். அநாதைச் சிறுமி முணுமுணுத்தாள், ''தூங்காய் கண்ணே! தூங்காய் கண்ணே''

கிழவியின் மூத்த மகள் கண்ணை மூடித் தூங்கிவிட்டாள். அவள் தூங்கும்போது புள்ளிப்பசு துணியை நெய்து, சலவை செய்து, சுருட்டியது.

எசமானியின் முதலாவது மகள் தூங்கி விட்டபடியால் கிழவியால் எதையும் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, தனது இரண்டாவது மகளிடம் சொன்னாள்; ''எனது அருமைக் குழந்தாய், போய் அந்த அநாதைப் பெண்ணுக்கு யார் உதவி செய்வதென்று பார்'' கிழவியின் இரண்டாவது மகள் அநாதைச் சிறுமியுடன் சென்றாள். அவளும் தன் தாயினுடைய கட்டளையை மறந்து வெயிலில் அலைந்து களைத்துப் போய் புல்தரையில் படுத்தாள். அநாதைச் சிறுமி முணுமுணுத்தாள், ''தூங்காய் ஒரு கண்ணே! தூங்காய் மறு கண்ணே!'' என்றாள்.

**"அழகியே! எனது ஒரு காதுக்குள் நுழைந்து மறு காதின் வழியாக வெளியே வா.... உனக்கு அளிக்கப்பட்ட வேலைகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டு விடும்'' புள்ளிப்பசு சொன்னபடி நிகழ்ந்தது**

# புள்ளிப்பசு செய்த உதவி



இரண்டு கண்களையும் மூடித் தூங்கிவிட்டாள். அவள் தூங்கிய போது புள்ளிப்பசு துணியைநெய்து, சலவை செய்து, சுருட்டியது.

கிழவி மிகவும் கோபமடைந்தாள். மூன்றாவது நாளன்று தனது மூன்றாவது மகளை அநாதைப் பெண்ணுடன் போகுமாறு கூறினாள். இப்போது முன்னிலும் அதிகமான வேலையை செய்யும்படி அநாதைப் பெண்ணுக்கு கூறியிருந்தாள்.

கடைசி மகள் வெயிலில் மிகவும் களைப்புற்றுப் போய் புல்தரையில் படுக்கும் வரை விளையாடினாள், தாவிக் குதித்தாள்.

அநாதைச் சிறுமி முணுமுணுத்தாள், ''தூங்காய் ஒரு கண்ணே! தூங்காய் மறு கண்ணே!''

ஆனால்,மூன்றாவது மகள் துயில் கொள்ளவில்லை.கண் விழித்திருந்து எல்லாவற்றையும் பார்த்துவிட்டாள்.

(தொடரும்...)

# நல்ல நட்பு



சரண், வருண் இருவரும் ஒரே பாடசாலையில் படிக்கும் மாணவர்கள். சரண் பணக்கார வீட்டுப்பிள்ளை; வருணோ மிகவும் ஏழை. இப்படி இருவருக்கும் ஏற்றத்தாழ்வு இருந்தாலும் இருவரும் மனதளவில் இணைந்த நல்ல நண்பர்களாகவே இருந்தனர்.

ஒருமுறை வருணின் அம்மாவிற்கு உடல்நலம் சரியில்லாமல் போய்விட்டது. வீட்டின் அருகில் ஒரு மருத்துவர் இருந்தார். அவர் 'மருத்துவச் செலவுக்கு ஐநூறு ரூபா தேவைப்படும். அதை நீ தராவிட்டால் கட்டாயம் உன் அம்மா பிழைக்கவே மாட்டார்கள்' என்று கூறிவிட்டார்.

பாவம் வருணுக்கு அப்பாவும் இல்லை; என்ன செய்வான். பலரிடம் கடனாகப் பணம் கேட்டுப் பார்த்தான். ஆனால், சிறிய பையனான வருணை நம்பி ஐநூறு ரூபாவைத் தர எல்லோரும் மறுத்துவிட்டனர். வேதனைப்பட்ட வருண் மறுநாள் பள்ளிக்குச் சென்றான்.

நண்பன் முகம் வாடி இருப்பதைக் கண்ட சரண் விபரம் கேட்டு மனம் வருந்தினான். ஆனால், அவன் பெற்றோர் வருணுக்காக தனக்கு ஐநூறு ரூபா தரமாட்டார்கள் என்று நன்கு உணர்ந்தான்.

தன்னிடமும் வருணுக்கு உதவும் அளவிற்கு பணம் இல்லை என்பதை உணர்ந்தான். மிகவும் மனம் நொந்தபடி மாலையில் வருணின் வீட்டிற்குச் சென்றான். வருணின் அம்மாவை பார்த்தான். வெகுநேரம் அவனோடு அவன் வீட்டிலேயே இருந்தான். இருட்டிவிட்டது. எத்தனை தடவை கூறியும் சரண் புறப்படவே இல்லை. அன்று இரவு நண்பன் வீட்டில் தங்கி விட்டான். அதற்குள் சரணின் பெற்றோர் அவனைத் தேடத் துவங்கி விட்டனர்.

மறுநாள் விடிந்தது. சரணை கூட்டிக் கொண்டு தனது வீட்டிற்குப் புறப்பட்டான் வருண். "நான் என் பெற்றோரிடம் என்ன கூறினாலும் நீ மறுத்து எதுவும் பேசக்கூடாது'' என வருணைக் கேட்டுக்கொண்டான்.

பின் இருவரும் சரணின் வீட்டிற்குச் சென்றனர். மகனைக் கண்ட அவனது பெற்றோர் மிகவும் மகிழ்ந்தனர். தங்களது மகனைக் கட்டி அணைத்து முத்தம் இட்டனர்.

"நேற்று இரவு எங்கே சென்றாய்?'' என்று கேட்டனர்.

''அம்மா! நான் பிழைத்து இன்று உங்கள் முன்னே உயிருடன் நிற்பதே இந்த வருணின் உதவியால்தான். நான் நேற்று மாலை பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்த போது எதிரில் ஒரு மனிதன் வந்தான். அவனைப் பார்க்கவே மிகவும் பயமாக இருந்தது. ஆனால், அவன் மிகுந்த அன்புடன் என் அருகில் வந்து எனக்கு ஒரு சொக்லேட் தந்தான். அதைத் தின்றதும் எனக்கு தலை சுற்றிவிட்டது. அடுத்த நிமிடம் அவன் என் கழுத்தில் கிடந்த சங்கிலியை பறித்துக் கொண்டு என்னைக் கொல்லப் பார்த்தான். பயத்தில் நான் மயங்கி விட்டேன். ஆனால், அந்த வழியாக வந்த என் நண்பன் வருண் அந்தத் திருடனிடம் இருந்து என்னைக் காப்பாற்றி என் சங்கிலியையும் பறித்துக் கொண்டு சத்தம் போட்டு இருக்கிறான். அடுத்த நிமிடம் திருடன் ஓடிவிட்டான். நான் மயக்கமாகிவிட்டதால் என்னிடம் நம் வீட்டு விலாசத்தைக் கேட்க முடியவில்லை. ஆனால், என்னை அவன் வீட்டிற்குக் கூட்டிப் போய் தங்க வைத்து இருக்கிறான். இன்று காலை என் மயக்கம் தெளிந்ததும் என்னைக் கூட்டி வந்தான்'' என்று கூறினான்.

'தக்க சமயத்தில் என் உயிரைக் காப்பாற்றிய என் நண்பனின் தாயாருக்கு உடல் நலமில்லை. அந்த அம்மாவின் உயிரைக் காக்க மருத்துவம் செய்வது உங்கள் பொறுப்பு'' என்றும் கேட்டுக் கொண்டான்.

சரணின் பெற்றோரும் மனம் உவந்து மருந்து மாத்திரைகளை வாங்கிக் கொடுத்து உதவினர். இதனால், சுகமடைந்தார் வருணின் தாயார். தன் பெற்றோர்களிடம் பொய் கூறினாலும் அந்தப் பொய்யால் தன் நண்பனின் தாயாரின் உயிரைக் காப்பாற்றியதில் மகிழ்ச்சி அடைந்தான் சரண்.

நல்ல நட்பிற்கு பணம் தேவையில்லை. ஏழையானாலும் பணக்காரர்களானாலும் சரி நல்ல மனமும், அன்பும் மட்டும் நீண்ட கால நட்பிற்குப் போதும். அதே போல நண்பர்கள் மகிழ்வான சமயத்தில் சேர்ந்து சிரிக்காவிட்டாலும் துன்பமான நேரத்தில் உதவி செய்ய வேண்டும். அதுவே நல்ல நட்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் குறித்து அறிவூட்டும் சர்வதேச மனித உரிமைகள் தினம்



நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே பல்வேறு கோணங்களில் இருந்து எழுந்த மனித உரிமைகள் குறித்த முரண்பாடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் விடை காணும் பொருட்டு நடாத்தப்பட்ட செயற்பாடுகளின் பெறுபேறாகவே ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படத் தொடங்கியது.

## மனித உரிமைகள் தொடர்பான உலகப் பிரகடனம்

மனிதனின் உரிமை மற்றும் சுதந்திரம் குறித்த முதலாவது கவனயீர்ப்பு பிரகடனம் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையால் நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது. இப்பிரகடனத்தின் நோக்கம்,மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தலாகும். 48 நாடுகள் இதற்கு ஆதரவாக வாக்களித்தன. 8 நாடுகள் வாக்களிப்பை பகிஷ்கரித்தன. எனினும், மேலதிக வாக்குகளால் இந்த உலகப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

## பிரகடனம் தோன்றியதன் பின்னணி



மனித உரிமைகளுக்கான உலகப் பிரகடனம் தோன்றுவதற்குப் பல பின்னணிக் காரணங்கள்




ஏதுவாக அமைந்தன. அவற்றுள் மனித உரிமைகளுக்காக காலத்திற்குக் காலம் நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்கள் முக்கிய பதிவுகளாக காணப்படுகின்றன. இதில் கி.பி 1215 இல் ஏற்படுத்தப்பட்ட 'மக்னா கார்ட்டா' உடன்படிக்கை மிக முக்கியமானது.

அத்துடன், கிரேக்க யுகத்தின் இறுதியில் உருவான 'மனிதர்கள் அனைவரும் சமத்துவமானவர்கள்' என்ற மேலைத்தேய உலகில் முதன் முதலாக முன்வைக்கப்பட்ட கருத்தும் மனித உரிமை சம்பந்தமான உலகப் பிரகடனம் உருவாக அடிப்படைக் காரணமாக அமைந்தது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிரான்ஸின் தலைநகரான பெரிஸ் மாநகரில் ஒன்றுகூடிய 'யுனெஸ்கோ' செயற்குழுக் கூட்டமும் முக்கிய காரணியாக அமைந்தது.



## ஆய்வுக்குழு

அங்கத்துவ நாடுகளில் அமைக்கப்பட்டுள்ள விசேட ஆய்வுக்குழுக்களிடமிருந்து மனித உரிமை ஆணைக்குழுவிற்குக் கிடைக்கும் சகல தகவல்களும் மிக ரகசியமான முறையில் பேணப்படும்.

அவ்வாறே, தொடர்ந்து நிகழும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கும் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.



## மனித உரிமைகள் தினம்

மனித உரிமை ஆணைக்குழு உலக மனித உரிமைகள் குறித்து வெளியிட்ட 'உலக மனித உரிமைப் பிரகடனம்' நிறைவேற்றப்பட்ட நாளான டிசம்பர் 10 ஆம் திகதியையே மனித உரிமைகள் தினமாக அறிவித்துள்ளது. இத்தினத்தில் மனிதனின் உரிமைகள் குறித்து மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்வுகள் பல நடாத்தப்படுகின்றன.

# 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



கிளிநொச்சி ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் க.கனியமுதன், 121 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மா.கஜேந்திரன்-க.இராசலெட்சுமி தம்பதியரின் புதல்வராவார்.



இ.விதுர்ஷன், 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், லக்கம் த.வித்தியாலயத்தின் மாணவராவார்.



தல்கஸ்பிடிய மு.ம.வித்தியாலயத்தின் மாணவியான எம்.என்.கே.ஆதிமா, 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.ஃபஸீயா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தல்கஸ்பிடிய மு.ம.வித்தியாலயத்தின் மாணவியாவார்.



ஏ..அர்ஹம், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தல்கஸ்பிடிய மு.ம.வித்தியாலயத்தின் மாணவராவார்.



பதுளை சாரணியா த.ம. வித்தியாலய மாணவி எஸ்.துஷானா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சிவாராஜா-செல்வராணி தம்பதியரின் புதல்வியாவார்.



கோப்பாய் நாவலர் த.வித்தியாலய மாணவியான பா.சிபோறா, 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



பு/ஸாஹிரா ஆரம்ப பாடசாலையை சேர்ந்த எம்.உசாமா, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர் எம்.நசார்- லாமியா ஆகியோரின் புதல்வராவார்.



மாறை/அறபா தே.பாடசாலை மாணவி எம்.எஃப்.ஃபாத்திமா, 169 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.ஃபவ்ஸ்-இல்மியா தம்பதியரின் புதல்வியாவார்.



தல்கஸ்பிடிய மு.ம.வித்தியாலய மாணவனான என்.அனஸ், 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



தல்கஸ்பிடிய மு.ம.வித்தியாலய மாணவியான எம்.எச்.ஆய்ஷா, 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.ஃபஹ்மா, 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தல்கஸ்பிடிய மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றார்.



பதுளை சரஸ்வதி க.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஜெ.அக்காஷ், 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஜெகநாத்-ராஜினி தம்பதியரின் புதல்வராவார்.




க/பதியுதீன் மஹ்மூத் பெ.தே. கல்லூரி மாணவிகளான (இ.வ) நஸ்ரீன் பானு (141 புள்ளிகள்), எஃப்.ஹிமாஸா (144 புள்ளிகள்), ஆர்.ரிம்ஸா (151 புள்ளிகள்), ஏ.அதீகா (145 புள்ளிகள்), எஃப்.ரிஸ்லா (178 புள்ளிகள்), ஸஸ்னா ஃபர்வின் (156 புள்ளிகள்), எஃப்.சாபிரா (145 புள்ளிகள்), எஃப்.நதா (151 புள்ளிகள்), எஃப்.ஆஸத் (152 புள்ளிகள்), நுஸ்ரத் பானு (143 புள்ளிகள்) ஆகியோர் தங்கள் அதிபர், உப அதிபர்கள், துணை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் இருப்பதையே படத்தில் காண்கின்றீர்கள்.



எட்டியாந்தொட்டை புனித மரியாள் த.ம. வித்தியாலயத்தைச் சேர்ந்த இரா.நிலக்ஷன், 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



இ/அல்-மக்கியா மு.ம. வித்தியாலயத்தைச் சேர்ந்த சம்மாஸ் அஹமட், 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஸாபிக்ஹஸன்-றிஸ்வானா தம்பதியரின் புதல்வராவார்.



தல்கஸ்பிட்டிய மு.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எம்.ஏ.அகீல், 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எம்.ஏ.ஃபாத்திமா, 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தல்கஸ்பிடிய மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றார்.



இ/பர்குசன் உ.பாடசாலையின் தமிழ்ப் பிரிவு மாணவி ஜோசப் மேரியன், 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஜோசப்-ஞானமலர் தம்பதியரின் புதல்வியாவார்.



இ/பர்குசன் உ.பாடசாலையின் தமிழ்ப் பிரிவு மாணவன் ஸ்டெபான் சஞ்ஜய், 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எஃப்.செல்வதுரை-ரேணுகாதேவி தம்பதியரின் புதல்வராவார்.



தி/அல்-ஹம்றா ம.வித்தியாலய மாணவனான ஜே.றிப்னாஸ், 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



நானுஓயா த.ம.வித்தியாலய மாணவி வித்யா தில்ருக்ஷ், 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சிவானந்தர்-புஸ்பராணி தம்பதியரின் புதல்வி ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுங்கள்

1



**அற்லஸ் அறிவுக்கு விருந்து - 238 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...**

**போட்டி: 01**
இரா.தனுஷிகா,
தரம் - 7B, வவுனியா த.ம.ம.வித்.,
வவுனியா.

**போட்டி: 02**
எஃப்.றிபானா சாலிஹ்,
தரம் - 8, சுங்காவில் மு.ம.வித்.,
பொலன்னறுவை.

**போட்டி: 03**
என்.எஃப்.ஸஹ்னா,
தரம் - 6A, அல்-அதான் ம.வித்.,
பதுளை.

**போட்டி: 04**
எஸ்.ரீஸா அஹமட்,
தரம் - 4A, கனேவல்பொல
மு.ம.வித்.,
அனுராதபுரம்.

**போட்டி: 05**
ஏ.வைதேவி,
தரம் - 9, ஸ்ரீ சண்முகா த.வித்.,
ஹபுகஸ்தலாவ.

**பாராட்டுப் பெறுவோர்**

* ஏ.அருண், தரம்-4, இரஜவெல இ.தே.கல்.,திகனை.
* எம்.ஸமீர், தரம்-4, வத்தேகெதர மு.வித்., கண்டி.
* அ.அஸ்மா, 20A, நீதிமன்ற வீதி, திருகோணமலை.
* ந.மதுநிலவன், தரம்-8A, புற்றளை ம.வித்., பருத்தித்துறை.
* தாஜ் மென்சன், 3, மாளிகா வீதி, மாளிகைக்காடு-கிழக்கு.
* ப.அர்ச்சனா, காளி கோவிலடி, சங்கானை, யாழ்ப்பாணம்.
* பு.ஜயருக்ஷாந்த், ரணபிம ரோயல் கல்., பேராதனை.
* என்.எம்.அஸ்னஜ், தரம்-4, கமு/அல்-ஹம்ரா வித்., கல்முனை.
* ஆர்.விதுர்ஷினி, தரம்-2, மட்/குடியிருப்பு கலைமகள் ம.வித்.,மட்டக்களப்பு.
* ஜெ.கவினயா, தரம்-6, இராமநாதன் இ.ம.கல்., கொழும்பு.

## பின்வரும் பழமொழிகளின் மிகுதியை எழுதி, முழுமைப்படுத்துங்கள்

4

1. குறைகுடம் தளும்பும்; ..............................
2. கேடு வரும் பின்னே; ..............................
3. தம்பி உடையான்; ..............................
4. நோயற்ற வாழ்வே; ..............................
5. கங்கையில் மூழ்கினாலும்; ..............................





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.01.06 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 241**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**



## ஆங்கில எழுத்தைக்கொண்டு இடைவெளியை நிரப்புக

3


| | |
|---|---|
| 1) t_l_ps | 5) ch_ck |
| 2) l_dyb_g | 6) r_bb_t |
| 3) r__nb_w | 7) b_tt_rfly |
| 4) fl_w_rs | 8) r_b_n |

## அறிவுக்கு விருந்து 238 விடைகள்

**போட்டி: 02**



**போட்டி: 03**




**போட்டி: 04**
1. மட்குடம்
2. நெற்குவியல்
3. மாதுளங்காய்
4. ஆகாயகங்கை

**போட்டி: 05**
விபுலானந்தர்

## இச்சிறுமியின் பாதணியை அணிவதற்கு வழி காட்டுங்கள்

2




## குழம்பியுள்ள வசனங்களை ஒழுங்கமைத்து, கதையை சரியாக அமைக்க

5

1. இந்தச் சிறு முயலைச் சாப்பிடுவதைவிடத் துள்ளி ஓடும் அந்த மானைச் சாப்பிடலாம் என எண்ணி முயலைக் கைவிட்டது.
2. தனது பசிக்கு இந்த முயல் போதுமா என யோசித்துக்கொண்டிருந்தது.
3. சிங்கம் ஒன்று அங்குமிங்கும் தேடியலைந்து ஒரு முயலைப் பிடித்தது.
4. பாவம் சிங்கம்! கடைசியில் எதுவும் கிடைக்காமல் ஏமாற்றமடைந்தது.
5. அந்தப் பக்கமாக காட்டு மான் ஒன்று வந்தது.
6. மானைத் துரத்திச் சென்றபோது மான் துள்ளிக்குதித்து தப்பியோடிவிட்டது.
7. அது காய்ந்துபோன ஒரு கோடை நாள்.
8. இருப்பினும் வேறு வழியில்லாமல் முயலையே சாப்பிடுவோம் என எண்ணியபோது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரம்பரிய இசை 'பானிஹரி'



நீர் தாராளமாகக் கிடைக்கும் இடங்களில் அதன் மகத்துவம் பற்றி யாரும் உணர்வதில்லை. ஆனால், நீர் கிடைக்காத பிரதேசங்களில் வாழும் மக்கள்தான் அதன் மகத்துவத்தையும் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் பெரிதும் உணர்வார்கள். அந்த வகையில் நமது அண்டை நாடான இந்தியாவின் பல பகுதிகளில் வாழும் மக்கள் நீர் இன்றிப் படும் கஷ்டம் ஏராளம்.

பாலைவனப் பகுதிகள் நிறைந்த ராஜஸ்தானில் மக்கள் நீருக்காகப் பெரும் கஷ்டப்படுகின்றனர். இன்று நேற்றல்ல. பாரம்பரியமாக இந்த நிலை தொடர்ந்து வருகிறது. அதனால்தானோ என்னவோ, இங்கு 'பானிஹரி' என்னும் இசையொன்று பெண்களால் பாரம்பரியமாகப் பாடப்பட்டு வருகிறது. நீரை அடிப்படையாக வைத்தே இந்த 'பானிஹரி' பாடல்கள் அமைந்துள்ளன.

பழங்குடி இனப்பெண்கள் நீர் எடுப்பதற்காக நீண்ட தூரம் சென்று வருவதை அடிப்படையாக வைத்தும் இந்தப் பாடல்கள் பாடப்படுகின்றன. பெண்கள் தங்கள் அன்றாட வேலைகள், கிணற்றைச் சுற்றிக் காணப்படும் காட்சிகள், மாமியார், மருமகள் பிரச்சினைகள் போன்றவை குறித்தும் பாடுகின்றார்கள். மண்வாசனை கமழும் இந்தப் பாடல்கள் பாலைவனப்பகுதியில் வாழ்வதால் ஏற்படும் கஷ்டத்தையும் அலுப்பையும் போக்க உதவுகின்றனவாம்.

இப்பாடல்களைப் பாடும் பெண்கள் பெரும்பாலும் சமூகரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பின்தங்கிய வகுப்பினர்களாகவே இருக்கின்றனர். இவர்களே, நீர் பெறுவதில் உள்ள பெரும் கஷ்டத்தையும் துயரத்தையும் அனுபவித்து வருகின்றனர்.

கஷ்டங்களையும் துயரங்களையும் ஓரளவு மறந்து செயற்பட இந்த 'பானிஹரி' பாடல்கள் உதவுகின்றனவாம். அத்துடன், இவர்கள் வேலை செய்வதில் உள்ள கஷ்டத்தையும் சலிப்பையும் போக்கி மனஎழுச்சியையும் மனோபலத்தையும் இந்தப் பாடல்கள் இவர்களுக்கு வழங்குகின்றனவாம். இதன் காரணமாகவே இந்த 'பானிஹரி' பாடல்கள் இந்த மாநிலத்தில் பிரபலமடைந்தும் பொதுவானதாகவும் இருக்கின்றனவாம்.

பின்தங்கிய வகுப்பினர் மத்தியில் உருவான இந்த 'பானிஹரி' இசை மெதுவாக செல்வந்தர்களின் நாட்டார் நடனங்களிலும் இசை கலாசாரத்திலும் இணைந்து கொண்டுள்ளன. அடுப்பங்கரையே கதியென வாழும் பெண்கள் தமது ஏமாற்றம், துயரம், அர்ப்பணிப்பு, தியாகம் என்பனவற்றையும் அடிப்படையாக வைத்து இப்பாடல்களைப் பாடுகின்றனர். இந்த 'பானிஹரி' பாடல்கள் சம்பிரதாயபூர்வமான சாஸ்திரிய ரீதியிலான அல்லது ராகத்திலான பாடல்கள் அல்ல. இவை தன்னிச்சையாக ஒரு பெண்ணின் உள்ளத்திலிருந்து வெளிப்படும் உணர்வுகளாகும்.

# வண்ணத்துப்பூச்சி உலகம்









உலகின் மிகப் பெரிய வண்ணத்துப் பூச்சிப் பூங்கா அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ளது. 'வண்ணத்துப்பூச்சி உலகம்' (Butterfly World) என்னும் இந்தப் பூங்காவில் கண்ணைக் கவரும் பல வண்ணங்களுடன் கூடிய வண்ணத்துப் பூச்சிகள், ஹம்மிங் பேர்ட் மற்றும் பறவைகள் குளவி இனங்கள் போன்ற பல்வேறு பறக்கும் உயிரினங்களையும் காணலாம். எவியேரி ஹவுஸ் (Aviary House) என்னும் கூடுகளில் இந்த வண்ணத்துப் பூச்சி இனங்கள் வளர்க்கப்படுகின்றன. இங்கு சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இனங்களைச் சேர்ந்த உயிரினங்கள் உள்ளன.

இப்பூங்காவில் அழகிய தடாகங்களும் உள்ளன. 'தொங்கும் தோட்டம்' எனக்கூறப்படும் பட்டாம்பூச்சி இனப்பெருக்கத் தோட்டங்களும் இங்குள்ளன. இங்கு பட்டாம்பூச்சிகள் முட்டையில் இருந்து புழுவாக உருவாகி, பின்னர் பட்டாம்பூச்சிகளாக வெளியேறுகின்றன. நீர்வீழ்ச்சிகள் பல்வேறு வகை மரம் செடிகொடிகள் என்பன மனதுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடியனவாக உள்ளன.

இதேவேளை, இப்பூங்காவில் உள்ள பூச்சி, புழு அருங்காட்சியகத்தில் வண்டுகள் குளவி இனங்கள், தேள்கள், அந்துப்பூச்சிகள் மற்றும் பல உயிரினங்களையும் காணலாம். இங்கு பக்சூ (Bug Zoo) என்னும் பூச்சி காட்சியகம் ஒன்றுள்ளது. இதில் பல உயிருள்ள பூச்சி இனங்கள் உட்பட நீர் பூச்சிகள், சிலந்தி இனங்கள், குளவி இனங்கள் என்பன உள்ளன. இங்குள்ள ஆய்வுகூடத்தில் வண்ணத்துப்பூச்சிகள் மற்றும் பூச்சி இனங்கள் முட்டையாக இருந்து பல்வேறு வடிவங்களில் உருவாகும் பரிணாம வளர்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளது.

# அனைத்து மக்களையும் கவரும் தாமரைக் கோயில்



தாமரைக்கோயில் என்று அழைக்கப்படும் தாமரை வடிவிலான இந்தக் கோயில் டெல்லியில் உள்ளது. பஹாய் வழிபாட்டுத்தலமான இந்தக் கோயிலைப் பார்வையிடத் தினமும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்றனர்.1986ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கோயில் இதுவரை ஏராளமான கட்டிட நிர்மாண விருதுகளை வென்றிருக்கின்றது. இந்த தாமரைக் கோயிலுக்கு மதவேறுபாடின்றி அனைத்து மதத்தினரும் வருகை புரிந்து வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இந்த தாமரைக் கோயிலை வடிவமைத்தவர் ஓர் ஈரானியர். பரிபோஸ் சஹ்பர் என்னும் பெயருடைய இவர் தற்பொழுது கனடாவில் வசிக்கின்றார். இக்கோயில் அமைந்துள்ள இடத்தை வாங்குவதற்கான நிதியில் பெரும் பங்கை ஹைதராபாத்தைச் சேர்ந்த ஆர்டிஸிர் ருஷ்தாம்பூ என்பவரே வழங்கியுள்ளார். இவர் இந்த நோக்கத்துக்குத் தன் வாழ்வின் முழுச் சேமிப்பையும் 1953 ஆம் ஆண்டில் வழங்கினாராம்.

இக்கோயில் 1986 ஆம் ஆண்டு பொதுமக்களின் வழிபாட்டுக்காக திறக்கப்பட்டதிலிருந்து 500 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இதனால் கவரப்பட்டு இங்கு வருகை புரிந்துள்ளனர்.



உலகில் அதிகமானோர் செல்லும் இடங்களில் இதுவும் ஓர் இடமாக வளர்ச்சி அடைந்துள்ளது

துர்க்கை அம்மன் பூஜைக் காலங்களில் தாமரை துர்க்கைக்கு உகந்த மலராகவும் மற்றும் பந்தல் அலங்காரங்களுக்கு உரிய பொருளாகவும் இருப்பதால் இக்கோவிலை வந்து தரிசிப்பதை துர்க்கையை தரிசிப்பதாகவே மக்கள் கருதுகின்றனர்.

இந்தத் தாமரைக் கோவிலில் எந்த உருவப்படமோ, உருவங்களோ, சிற்பங்களோ, பலிபீடங்களோ இல்லை. இங்குள்ள பிரார்த்தனை மண்டபத்தில் ஒரே சமயத்தில் 2500 க்கும் மேற்பட்டவர்கள் அமர்ந்து பிரார்த்தனை செய்யலாம். இந்துக்கள், இஸ்லாமியர்கள், சீக்கியர்கள், பௌத்த மதத்தினர், வைணவர்கள்,கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள்,சமணர்கள் என்று அனைத்து மதத்தினருக்கும் அவரவர் கோட்பாடுகளுக்கு ஏற்ற வடிவத்தில் இக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இன,மத,மொழி வேறுபாடின்றி அனைத்து மக்களும் இங்கு வருகை புரிகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கெலண்டர்’ உருவான வரலாறு









என்ஸியன்ட் கெலண்டர்




கெஸர் கெலண்டர்


ரோமானிய கெலண்டர்

மற்றுமொரு புதிய வருடம் பிறக்கின்றது. புதுவருடம் என்றாலே கெலண்டர் எனப்படும் நாட்காட்டி முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. கெலண்டர் எவ்வாறு உருவானது என்பதில் ஒரு தனி வரலாறே உள்ளது.

அதன்படி உலகிலேயே மிகவும் பழைமை வாய்ந்த கெலண்டராக அடையாளப் படுத்தப்படுவது சுமேரியர்கள் உருவாக்கிய கெலண்டரேயா கும். சந்திரனின் வளர்பிறை, தேய்பிறை ஆகியனவற்றை அவதானித்து அதற்கேற்பவே சுமேரியர்கள் இக்கெலண்டரை அமைத்திருந்தனர். சுமேரியர் களைப் போலவே 'மாயா' வம்சத்தினரும் கெலண்டரை உருவாக்கியிருந்தனர். மெக்சிகோ உட்பட மத்திய அமெரிக்க நாடுகளில் பயன்படுத்தப்பட்ட கெலண்டரைப் போலவே 'மாயா' வம்சத்தினரின் கெலண்டரும் அமைந்திருந்தது.

மேலும், ரோமானியர்களும்கூட சந்திரனில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவகையில் தமது கெலண்டரை உருவாக்கியிருந்தனர்.

ரோமானியர்களின் கணிப்பின்படி, ஒரு வருடமானது 355 நாட்களைக் கொண்டதாகவே கணிப்பிடப்பட்டிருந்தது. ஆரம்பகாலங்களில் மாத்திரம் மாயாவின் மேற்பார்வையின் கீழேயே கெலண்டர் அமைப்பை மேற்கொண்டனர். எனினும், நாளடைவில் ரோமை ஆட்சி புரிந்த ஜூலியஸின் காலத்தில் கெலண்டரை உருவாக்குவதில் மேலும் நேர்த்தியான வழிமுறைகளைக் கையாள்வதற்காக வானியல் ஆராய்ச்சியாளர்களின் வழிகாட்டல் பெறப்பட்டது. இவர்களின் வழிகாட்டலின்படி அதுவரை பின்பற்றிவந்த கெலண்டரின் ஒவ்வொரு நான்கு வருடத்திலும் ஒரு தடவை மேலும் ஒரு நாள் சேர்க்கப்பட்டு 365 நாட்களைக் கொண்டு கெலண்டர் உருவாக்கப்பட்டது.

இதற்கமைய, ஆரம்பகால வருடத்தின்படி மார்ச் மாதம் முதலாம் திகதியே வாரத்தின் முதல் நாளாக பின்பற்றப்பட்டு வந்த வழக்கு மாற்றப்பட்டு புதிய முறையின்படி, ஜனவரி மாதம் முதலாம் திகதியே வருடத்தின் முதலாம் நாளாக மாற்றப்பட்டது. இருப்பினும், 'ஜூலியன்' கெலண்டர் கூட முழுமையான கெலண்டராகக் கருதப்பாடமையினால் அதிலும் கூட மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன்பின், 1[illegible] ஆம் வருடத்தில் 'கிரகரி' என்ற பாப்[illegible] 'கிளடியஸ்' என்ற ஆராய்ச்சியாளரின் உதவியை நாடினார். தற்போது நாம் பயன்படுத்தி வருகின்ற கெலண்டரான[illegible] ஆராய்ச்சியாளர் கிளடியஸ் மேற்கொ[illegible] மாற்றங்களுடனேயே[illegible] பாவனையில் உள்ள[illegible] குறிப்பிடத்தக்கது. இதற்கு வழிசமைத்[illegible] பாப்பரசர் 'கிரகரி'[illegible] நினைவுபடுத்தும் நோக்கிலேயே இதற்கு 'கிரகரி' கெலண்[illegible] என்று பெயரிடப்[illegible]டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்க தாகும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 30, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org